அருணோதயம் கொள்கை நூல் வரிசை

# தமிழ் தந்த இன்பம்





'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

51 970 53

# தமிழ் தந்த இன்பம்

பண்பாளர் தி. க. சண்முகம் அவர்க(ளுக்கு)
அன்புள்ள
நா. பாண்டுரங்க(ன்)
3-9-

அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

ஆசிரியர்கள் :

அ. கி. பரந்தாமனார், M.A., கா. அப்பாதுரை, M.A., L.T.
நா. பாண்டுரங்கன், M.A., சுப. அண்ணாமலை, B.O.L. (Hons)

அருணோதயம்
சென்னை-14,

அருணோதயம் தொகை நூல் வரிசை 1
அருணோதயம் வெளியீடு: 26
முதற் பதிப்பு: செப்டம்பர், 1956
பதிப்புரிமை பெற்றது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

நூல்நிலையப் பதிப்பு ரூ. 1 8 0

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 881
நன்கொடை எண்: 881

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை—14.

# பதிப்புரை

அருணோதயம் தொகை நூல் வரிசை என்ற தலைப்பில் தொடர்ந்து தமிழ் இலக்கியங்கள் பற்றி பல தமிழ் அறிஞர்களை எழுதச் செய்து வெளியிட்டால் நல்ல பயனுடையதாக இருக்கும் என்று எண்ணினேன். வெளியிடுவதென முடிவும் செய்தேன். பல தமிழறிஞர்களுக்கும் கடிதம் எழுதினேன். சிலர் உடனே கட்டுரை தர சம்மதித்தார்கள். சிலர் அடுத்துவரும் நூல் களிலே எழுத இசைந்தார்கள்.

பலரது தூண்டுதலும் சம்மதமும் தான் முதல் நூலை இவ்வளவு விரைவில் கொண்டு வர உதவியது. இது ஒரு முதல்தர நூல்.

என்னை இம் முயற்சிக்குத் தூண்டிய எனதருமை நண்பர் கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கும், இந்நூலில் கட்டுரைகள் எழுதி யுள்ள திரு. அ. கி. பரந்தாமனார், கா. அப்பா துரையார், நா. பாண்டுரங்கன், சுப. அண்ணாமலை அவர்களுக்கும் என் இதயம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இம் முயற்சி வெற்றிபெற உங்களின் பேரா தரவு கிடைக்குமென எண்ணுகிறேன்.

அருணன்

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# உள்ளடக்கம்

1. சிந்தாமணி தந்திடும் நந்தா இன்பம்

அ. கி. பரந்தாமனார், M.A.,
தமிழ் விரிவுரையாளர்,
தியாகராஜர் கல்லூரி—மதுரை.

2. வான்புகழ் மேகலை

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரை, M.A., L.T., (விசாரத்)

3. நன்னன் மலையில் நாளும் திருநாள்

நா. பாண்டுரங்கன், M.A.,
தமிழ் விரிவுரையாளர்,
புதுக் கல்லூரி—சென்னை-14.

4. குறுந்தொகை யமுது

சுப. அண்ணாமலை, B.O.L. (Hons)
தமிழ் விரிவுரையாளர்,
தியாகராஜர் கல்லூரி—மதுரை.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

சிந்தாமணி

# சிந்தாமணி தந்திடும் நந்தா இன்பம்

அ.கி.பரந்தாமனார். M.A

செந்தமிழ் அணங்கின் தலைசிறந்த அணியாய் நந்தா ஒளியுடன் திகழும் சிந்தாமணி, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இதனைச் சீவக சிந்தாமணி என்பர். இது விருத்தப்பாவால் தோன்றிய முதற்பெருங்காப்பியம்; பின் வந்த பெருங்காப்பிய கவிஞர்களுக்கும் சிறு காப்பிய புலவர்களுக்கும் கலங்கரை விளக்காய், வழிகாட்டியாய், புலமைக்கும் கற்பனைக்கும் கருவூலமாய் இலங்கிய அரும் பெருங்காப்பியம். இது, காலத்தாற் பிற்பட்டதாயினும் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பிய வரிசை முறையில் முற்படக்கூறும் பெருமை பெற்று, நவில் தொறும் நவில்தொறும் புதுப்புது நயங்களை நல்குவதாய்ச் சொல்லழகும் பொருளழகும் பிற அழகும் கொண்டதாய்க் கற்பவர்களுக்குக் களிப்பளிக்கும் காப்பியமாய் விளங்கி வருகிறது. இதனாலன்றோ தமிழ் நூல்களைப் படித்துச் சுவைத்துத் திளைத்த பழம்புலவர் ஒருவர்,

"திருத்தக்க மாமுனி சிந்தாமணி, கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேன் ;—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் ; குறள்
அணுகேம்
எங்குளழில்என் ஞாயிறு எமக்கு ?"

என்று உலக இன்பத்தை வெறுத்துப் பாடிய நிலையிலும், சிந்தாமணியை மறவாது முதலில் வைத்துப் பாடினார் ? அப்புலவர் படித்து இன்புற்ற காப்பியங்கள் மூன்று ; அறநூல் ஒன்று. இவற்றைப் படித்தின்புற்ற புலவருக்கு உலகமே சுவைக்காத நிலை ஏற்பட்டது. அதனால், அவர் சூரியன் எத்திக்கில் எழுந்தாலும் கவலை இல்லை என்றார். அங்ஙனம் வெறுப்புக் கொண்ட காலத்திலும் தாம் சிறந்த இன்பத்தைக் கண்டதற்குக் காரணமாயிருந்த சிந்தாமணியை முதற்கண் கூற மறக்கவில்லை. இதனால் என்ன தெரிகிறது ? அப்பழம்புலவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காப்பியம் சிந்தாமணி என்பது புலனாகிறது.

அப்பழம்புலவர் சிந்தாமணியை முதலில் வைத்துக் கூறியது, சிந்தாமணிக்குள்ள சிறப்பைக் காட்டுகிறது. இச்சிந்தாமணி உண்மையிலே தலைசிறந்த இனிய காப்பியமே. வீரமா முனிவர், "திருத்தக்க தேவர் (சீவக சிந்தாமணி ஆசிரியர்) கவிஞருள் வேந்து" என்று பாராட்டியுள்ளார். தண்டமிழ் மொழியின் இலக்கியப் பெருமையை எண்டிசையும் பரப்பிய டாக்டர் ஜி.வி.போப் என்ற அறிஞர், "சீவகசிந்தாமணி இப்பொழுதுள்ள மிகப் பெரிய இலக்கியச் சின்னமாகும். தமிழ் மொழியின் இலியதும் ஒடிசியுமாக உள்ள கற்பனை மிகுந்த இப்பெருங் காப்பியம் உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும்" என்று கூறியுள்ளார். பிரான்சு நாட்டின் பன்மொழி

ஆராய்ச்சியாளரான ஜூலியன் வின்சன், “சிந்தாமணி எல்லாத் தமிழிலக்கியங்களுள்ளும் பழமையானது; சமணத்தைப் பிரசாரம் செய்வதற்காக இயற்றப்பெற்றது. இலக்கியச் சிறப்புப் பெறுதிருந்தால் அது எப்பொழுதோ அழிந்து போயிருக்கும்” என்றார். சென்னை கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியராக இருந்த காலஞ் சென்ற ச. த. சற்குணர், *B. A.* அவர்கள், “என்னைத் தேற்றி இன்புறச் செய்தது சிந்தாமணியாகும். கொடுங்கோல் மன்னன் ஒருவன் இந்நாட்டைக் கைப்பற்றி இந்நாட்டிலுள்ள நூல்களையெல்லாம் எரியிட்டழிக்கக் கருதி ஒருங்கு தொகுத்துத் தீ வைப்பதற்கு முன் என்னை அழைத்து ‘இந்நூற்றெகுதியிலிருந்து நீ விரும்பும் ஒரு நூலை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்’ என்று கட்டளையிடுவானாயின், யான் விரைந்தோடிச் சீவகசிந்தாமணியினை எடுத்துக் கொள்வேன்—அது போன்று என் மனதைக் கவர்ந்த நூல் பிறிதின்மையின். உலகு போற்றும் திருக்குறள் அனுமானம் இல்லாத மருந்தைப் போல்வது. சிந்தாமணி அனுமானத்துடன் கூடியமருந்து போல்வது என்பது எனது கருத்து. சிந்தாமணியை சமண காவியம் என பொதுப்படக் கூறுவதைவிட, அது மக்களின் பகுத்தறிவை வளர்ப்பதையே தனது நோக்கமாகக் கொண்டிருப்பதால், அறத்தின் அடிப்படைமேல் எழுப்பப்பட்ட அருங்கோயில் எனக் கூறுவது மிகப் பொருத்தம் எனக் கருதுகிறேன்” என்று கூறியுள்ளார். இவர்கள் அனைவரும் சிந்தாமணியைக் குறித்துக் கூறியுள்ளவை வெறும் புகழ்ச்சியுரைகள் அல்ல; உண்மை உரைகள். காப்பியத்துள் நுழைந்து பார்த்தால் இவ்வுண்மை புலனுகாமல் இராது.

இனிக் காப்பியம் என்றால் என்ன என்று காண்போம். தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்,

"கள்ளையும் தீயையும் சேர்த்து — நல்ல
கார்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புலவோர்கள் — பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்"

என்று பாடினர். இனிமையும் வீரமும் ஆற்றலும் பரப்பும் பொருந்திய காப்பியங்கள் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் நனிபல உண்டு என்று கருதிய பாரதியார், சிந்தாமணி, சிலப்பதிகாரம் கம்ப ராமாயணம் போன்ற காப்பியங்களை நினைத்து இங்ஙனம் கூறினர். காப்பியத்தில் வீரம், காதல் முதலிய சுவைகள் நிரம்ப இருத்தல் வேண்டும். ஒப்புயர்வற்ற தலைவனைக் கொண்ட தாய், நாற்பொருள் பயக்கும் நீதி நெறிகளையுடையதாய், மலை, கடல் பருவம், சூரியன், சந்திரன் தோற்றம் முதலிய வற்றை வருணிப்பதால், மணம் செய்தல், முடிசூட்டல், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, உண்டாட்டு, புதல்வர்களைப் பெறுதல், ஊடல் முதலிய இன்பச் சுவை களைக் கூறுவதாய், தூது செல்லுதல், போர் புரிதல், வெற்றி யுறுதல் இவற்றை விரிவாய் வருணிப்பதாய்க் காப்பியம் விளங்குதல் வேண்டும். இங்ஙனம் சிந்தாமணிக் குப்பின் வந்த தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூல் கூறுகிறது. பாரதியார் கூறிய பண்புகளும் தண்டி யாசிரியர் சொல்லிய இலக்கண அமைதிகளும் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்தில் நிரம்பக் காணலாம். சீவக நம்பியைக் காப்பியத் தலைவனுகக் கொண்டு விளங்கும் சிந்தாமணி, நூற்பொருள் அமைப்பு, அழகு இவற்றில் ஒரு சிறிதும் குறையாது, அழகிய இனிய சுவைமிக்க 3154 விருத்தப்பாக்களாலானது. இது நாமகள் இலம்பகம், கோவிந்தையார் இலம்பகம், காந்தருவ தத்தையார் இலம்பகம், குணமாலையார் இலம்பகம், பதுமையார் இலம்பகம், கேமசரியார் இலம்பகம்,

கனகமாலையார் இலம்பகம், விமலையார் இலம்பகம், சுரமஞ்சையார் இலம்பகம், மண்மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், இலக்கணையார் இலம்பகம், முத்தி இலம்பகம் எனப் பதின்மூன்று இலம்பகங்களையுடையது.

இப்பெருங் காப்பியம் சீவகனைப்பற்றிய வரலாறு கூறுவதாலும், சிந்தித்த பொருள் எல்லாவற்றையும் தரும் இயல்புடையதாலும் சீவகசிந்தாமணி என்னும் பெயர் பெற்றது. இதற்கு மணநூல் என்றொரு பெயரும் உண்டு, கல்வி கற்றதை நாமகளை மணந்த தாகவும், அரசியலைக் கைப்பற்றியதை மண்மகளை மணந்ததாகவும், முக்தியடைந்ததைக் கேவல மடந்தையை மணந்ததாகவும், பெண்களை மணந்ததை இயல்பாக மணந்ததாகவும் ஆசிரியர் கூறுவதால் இந்நூலை மணநூல் என்று கூறுவர். இன்பச் சுவை மிகுதியாக இருப்பதால் இக்காப்பியத்தைக் காமநூல் என்றும் சிலர் தவறுகக் கூறுவதுமுண்டு. உண்மையில் சீவகசிந்தாமணி இனிய முறையில் அமைந்த இன்பச் சுவை மிகுந்த ஞான நூலாகும்.

சிந்தாமணி தந்திடும் நந்தா இன்பத்தை நுகர்வதற்கு காப்பியக் கதையைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். வளங்கள் மிகுந்த ஏமாங்கத நாட்டைக் கோ நகராகிய இராசமாபுரத்திலிருந்து ஆட்சி புரிந்து வந்த சச்சந்த மன்னன், தன் மாமன் மகளாகிய விசயமா தேவியை மணந்து, அவள் காதல் இன்பத்தில் மூழ்கி, அவ்வின்பத்தை ஒழிவின்றி நுகர்வதற்கு அரசாட்சி தடை யாயிருந்ததைக் கண்டு, ஆட்சிப் பொறுப்பை சிலகாலம் நல்லவன் போல் நடித்துவந்த கட்டியங்காரன் என்ற அமைச்சனிடத்தில் ஒப்படைத்து, அரண்மனையில் ஒரு பக்கம் தேவியுடன் இன்பம் நுகர்ந்திருந்தான். ஓராண்டு

கழிவதற்கு முன்னே கட்டியங்காரன் ஆட்சியை நிரந்தரமாகப் பெற்று வாழ வேட்கையுற்றுப் படை வீரரைத் தன் வயப்படுத்திச் சூழ்ச்சி செய்து, ஒரு நாள் அரண்மனையை வீரரோடு சூழ்ந்து அரசனைக் கொல்ல முற்பட்டான். முன்னரே விசயமாதேவி கண்ட தீய கனவால் தனக்கு நேரவிருந்த ஆபத்தை உய்த்துணர்ந்த மன்னன் கருப்பவதியான விசயமாதேவியை மயிற்பொறியில் பறந்து செல்லும் பயிற்சியில் பழக்கியிருந்தான். கட்டியங்காரன் தன்னைச் சூழ்ந்துகொண்டதும், "உரிமை முன் போக்கியல்லால் ஒளியுடை மன்னர் போகார்" என்றதற்கேற்ப மன்னன், கருவுற்றுத் திங்கள் நிறைந்த மனைவியை மயிற்பொறியில் வெளியேறுமாறு வேண்டினான். தேவி தன் நாயகனை விட்டுப் பிரிய இசையவில்லை. சச்சந்தன் காதல் துணைவியை நோக்கி,

*"நங்கைநீ நடக்கல் வேண்டும்;*
*நன்பொருட்கு இரங்கல் வேண்டா;*
*கங்குல்நீ அன்று கண்ட*
*கனவுஎலாம் விளைந்தது"*

என்று கூறக் கொங்கலர் கோதை கதறியழுதாள். மன்னன் அதைக்கண்டு,

*"சாதலும் பிறத்தல் தானும்*
*தம்வினைப் பயத்தி னாகும்;*
*ஆதலும் அழிவும் எல்லாம்*
*அவைபொருட்கு இயல்பு கண்டாய்;*
*நோதலும் பரிவும் எல்லாம்,*
*நுண்ணுணர்வு இன்மை யன்றே?*
*பேதைநீ பெரிதும் பொல்லாய்*
*பெய்வளைத் தோளி!"* என்றான்.

பின்னும்,

"தொல்லைநம் பிறவி எண்ணின்
தொடுகடல் மணலும் ஆற்ரு
எல்லைய ; அவற்றுள் எல்லாம்
ஏதிலம் ; பிறந்து நீங்கிச்
செல்லும் அக்கதிகள் தம்முள்
சேரலம் ; சேர்ந்து நின்ற
இல்லினுள் இரண்டு நாளைச்
சுற்றமே ; இரங்கல் வேண்டா !"

என்று தேவியைத் தேற்றி மயிற்பொறியில் ஏற்றி வெளியே அனுப்பிவிட்டுக் கட்டியங்காரனோடு போர் புரிந்து மாண்டான்.

தேவி நகர்ப்புறத்தை யடைந்ததும் பகைவனது வெற்றி முரசொலி கேட்டு, மயங்கிச் சோர்ந்து, பொறியை செலுத்தாது விட, அப்பொறி அங்கிருந்து சுடுகாட்டில் இறங்கியது. விசயை, அச்சுடுகாட்டில் சூரியனைப்போல ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்து,

(1) "வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டு உயர் அரங்கின் நிழல்போல்
நுடங்கிப் பேய் ஆட,
எவ்வாய் மருங்கும் இருந்து இரங்கிக் கூகை
குழறிப் பாராட்ட,
இவ்வாருகிப் பிறப்பதோ ? இதுவோ மன்னர்க்கு
இயல் வேந்தே ?"

(2) பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமான் அடிகள்
பேரறமும்
புறந்தந்து என்பால் துயர்க்கடலை நீந்தும்
புணைமற்று ஆகாக்கால்

*சிறந்தார் உளரேல் உரையாயால் சிந்தாமணியே*
*கிடத்தியால்!*
*மறங்கூர் நுங்கோன் சொற்செய்தேன் மம்மர்*
*நோயின் வருந்துகோ!"*

என்று வருந்தியழுதாள். அப்பொழுது அச்சுடுகாட்டுத் தேவதை அவளுடைய தோழிபோலத் தோன்றி, "நீ குழந்தையை மரத்தடியில் வைத்து மறைந்துநில். ஒருவன் இங்கு வந்து குழந்தையைக் கொண்டு செல்வான்" என்று கூறத் தேவியும் அவ்வாறே செய்தாள். இராசமா புரத்து வணிகச் செல்வனான கந்துக்கடன் தன் இறந்த குழந்தையைச் சுடுகாட்டில் புதைக்க வந்தபொழுது, இக்குழந்தையைக் கண்டு, தன் புதல்வன் உடலை ஆங்கிட்டு, விசயை புதல்வனைக் கொண்டுசென்று, வருந்திய தன் இல்லாளை நோக்கி, "நின்மகன் சாதலி னின்றும் தப்பினான்." என்று கொடுப்ப, அவள் அக்குழந் தையை ஏற்று மகிழ்ச்சி கொண்டாள். அவ்வணிகன், சுடுகாட்டில் அக்குழந்தையைத் தொட்டெடுத்த காலத்தில், அது தும்மிற்றாகத் தெய்வம், "சீவ" என்று வாழ்த்தியதால், அக்குழந்தைக்குச் சீவகன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். சீவகன், தக்கபருவத்தில் அச்சணந்தி என்ற ஆசிரியரிடம் எல்லாக் கலைகளையும் பயின்று 'கலையினது அகலமும் காட்சிக்கு இன்பமும் சிலையினது அகலமும் வீணைச் செல்வமும் மலையினின் அகலிய மார்பன் அல்லது இவ்வுலகினில் இலை என ஒருவனாயினான்;' தன் வரலாற்றையும் அவ்வாசிரியரால் அறிந்து சிறந்த வீரனாய் விளங்கினான்; நண்பர் பலர் சூழ இனிது வாழ்ந்து வந்தான்.

கல்வி முடிந்ததும் முதல் முதல் சீவகநம்பி, வேடர் கவர்ந்துசென்ற பசுக்கூட்டத்தை மீட்டு, அவ்வீரத்துக்குப்

பரிசாக அளிக்கப்பட்ட கோவிந்தை என்பாளைத் தன் நண்பன் பதுமுகனுக்கு மணம் புரிவித்தான்; பின்பு **கந்தருவதத்தை** என்பாளை யாழில் வென்று மணந்தான்; சில நாட்கள் கழிந்தபின் மதம்கொண்ட யானையால் கொல்லப்பட இருந்த **குணமாலை**யைப் பாதுகாத்து, அவள் மீது காதல்கொண்டு, அவளையும் மணந்தான். கட்டியங் காரன் தனது மதயானையை அடக்கியதற்காகச் சீவகன் மீது சினங்கொண்டு, அவனை ஏவலாளரால் சிறைப் படுத்தினன். வழியில் சுதஞ்சணன் என்ற தேவனால் சீவகன் மீட்கப்பட்டான். சீவகநம்பி, சுதஞ்சணனோடு சிலகாலம் இருந்து, பின்பு பல நாடுகளையும் காணவிரும்பி, மாறுவேடம் பூண்டு, பல இடங்கள் சென்று, அப்பால் பல்லவ தேயமடைந்து, சந்திராபம் என்னும் நகரை நண்ணி, அந்நகரமன்னன் மகள் **பதுமை**யை மணந்து, அவளுடன் இரண்டு திங்கள் தங்கியிருந்து, மேலும் பல நாடுகள் செல்லக் கருதி, அவளை விட்டுப் பிரிந்து சென்று, பல இடங்களையும் கடந்து, சித்திரகூடத் தவப்பள்ளி சேர்ந்து, அங்குத் தவத்தில் ஈடுபட்டிருந்த வானப்பிரத்த ஆசிரமவாசிகளாகிய முனிவர்களைக்கண்டு, அவர்களுக்கு அறவுரை வழங்கி, அங்கிருந்து போய்த் தக்க நாட்டைச் சார்ந்த கேமமாபுரத்தை அடைந்து, அவ்விடத்தில் **கேமசரி**யை மணந்து, அவளுடன் இரண்டு திங்கள் தங்கி யிருந்து, பின்பு வேறிடம் செல்லக் கருதி, அவளையும் விட்டுப் பிரிந்து போய், மத்திம தேயத்தைச் சேர்ந்த ஏமமா புரத்தை அடைந்து, அவ்வூர் அரச குமரர்களுக்கு விற் பயிற்சி யளித்து, அதனால் அவ்வரசன் மகளாகிய **கனக மாலை**யை மணந்து அங்கே தங்கியிருந்தான்.

தம்பி நந்தட்டனும் (கந்துக்கடன் மகன்) தோழர் களும் ஏமமாபுரத்தில் சீவக சாமியைக்கண்டு, அவனிடம் பல செய்திகளைக் கூறியதோடு தண்டகாரணியத் தவப்

பள்ளியில் விசயமாதேவியைக் கண்டதையும் குறிப்பிட்டார்கள். சீவகவள்ளல் கனகமாலையை அங்கேயே விடுத்துத் தோழர்களுடன் தண்டகாரணியம் அடைந்து, அங்குத் தவப்பள்ளியில் தாயைக் கண்டு மகிழ்ந்தான். தாயும் காளையாம் பருவம் என்று ஓராது மகனைக் கட்டித் தழுவினுள்.

"காளையாம் பருவம் ஓராள் காதல்மீக் கூர்தலாலே
வாளையாம் நெடிய கண்ணுள், மகனைமார்பு ஒடுங்கப்
புல்லித்
தாளையா முன்பு செய்த தவத்தது விளைவி லாதேன்
தோளையாத் தீர்ந்தது என்ருள் தொழுதகு
தெய்வம் அன்னுள்."

விசயமாதேவி மகனையும் தோழர்களையும் உபசரித்து, அத்தோழர்களுக்கு அரசியல் உண்மைகள் பலவற்றை அறிவுறுத்தினுள். மகனை நோக்கி, "நீ மாமன் கோவிந்தராசனைக் கண்டு, அவன் ஏவலால் பகைவனை வெல்வாயாக" என்று வெல்லும் வகை கூறி வாழ்த்தினுள்.

சீவகன் தாயைத் தன் மாமன் நகருக்கு அனுப்பி விட்டு, ஏமாங்கதநாடு அடைந்து, இராசமாபுரத்துக்குப் போய், அந்நகர்ப் புறத்தில் தோழர்களை இருக்கச்செய்து, மறுநாட்காலை அந்நகருள் அழகிய வடிவோடு புகுந்தான்; அங்கே விமலையைக் கண்டு காதலுற்று அவளை மணந்தான்; அதன் பின்பு ஆண்களையே பார்ப்பதில்லை என்று அந்நகரின் கன்னிமாடத்தில் இருந்த சுரமஞ்சரியைக் கிழவடிவத்தில் சென்று மயக்கி அவளையும் மணந்தான்; பின்பு வளர்த்த பெற்றோர்களாகிய கந்துக்கடனையும் சுநந்தையையும் கண்டு வணங்கினுன். அங்கே அவன் காந்தருவதத்தை, குணமாலை இருவரையும் சந்தித்து, அவர்களுடைய வருத்

தத்தைப் போக்கி, அவர்களை அங்கு இருத்தித் தன் தோழர்களுடன் கோவிந்தராசனைக் கண்டு, மேல் நடக்க வேண்டியவற்றை நடத்த வேண்டினன்.

கோவிந்தராசன், திரிபன்றி எந்திரம் ஒன்று அமைத்து, அந்த எந்திரப் பன்றியை அம்பால் அடித்து வீழ்த்துபவன் தன் மகள் **இலக்கணையை** மணக்கலாம் என்றறிவித்து, எல்லா நாட்டு வேந்தர்களையும் வரவழைத்தான். கட்டியங்காரனும் வந்திருந்தான். பலர் எந்திரப்பன்றியை எய்து வீழ்த்த முயன்றும் வெற்றி பெறவில்லை. சீவகநம்பி வெளிப்படையாகத் தோன்றி, அதை அம்பால் வீழ்த்தித் தள்ளி வெற்றியடைந்தான்; அதன்பின் தன்னை எதிர்த்த கட்டியங்காரனைப் போரில் வென்று அவனைக் கொன்ருன். விசயை மகிழ்ந்தாள்.

சீவகநம்பி இராசமாபுரம் அடைந்து, முடிசூட்டிக் கொண்டு தன் மனைவிமார்களை அங்கு அழைத்துக் கொண்டான். **இலக்கணைக்கும்** சீவகனுக்கும் திருமணம் நடந்தது. நம்பி தன்னுடைய எட்டு மனைவிமார்களுடன் இன்பமாய் வாழ்ந்து, பலர்க்கும் உதவி செய்து, செங்கோல் ஓச்சி வந்தான். வளர்த்த தந்தையான நந்தட்டன் இறந்துபோனுன். விசயையும் சுநந்தையும் துறவு பூண்டார்கள்.

சீவக வள்ளல் தனது நாற்பத்தைந்தாவது வயதில் நிலையாமையை உணர்ந்து, பற்ருெழிந்து, தனது மூத்த மகனுக்குப் பட்டங் கட்டிவிட்டுத் துறவுபூண்டு தவம் செய்து, மூவுலகுச்சி இன்பக் கடலாகிய பரிநிர்வாணம் எய்தினுன். சீவகன் துறவு மேற்கொள்ள உறுதிகொண்டதும் அவன் மனைவிமார்கள் தங்களை மறந்து துறவு கொள்ளலாகாது என்று வேண்டினுர்கள். கனகமாலை சீவகநம்பியை நோக்கி,

*" கண்ணே கயலோ கழுநீரோ காவியோ*
*பெண்ணே அமுதோ பிணையோ எனப் பிதற்றித்*
*துண்ணென் சிலைத்தொழிலும் காட்டிமுன்*
*இன்புற்றீர் !*
**புண்மேல் கிழிபோல் துறத்தல் பொருளாமோ ?"**

என்று கூறி வருந்தினாள். எட்டு மனைவியரை மணந்தும் எப்படி இன்பத்தில் மூழ்கிவிடாமல் எண்ணிய எண்ணத்தில் திண்ணியனாக இருந்து நினைத்ததை நிறைவேற்றினானோ, அப்படியே துறவுமேற்கொள்ள முடிவு செய்ததும் உலகப்பற்றையும் அறவே விட்டொழித்துக் காதல் இன்பத்தையும் முழுதும் மறந்து, துறவு பூண்டு, மூவுலகுச்சி இன்பக்கடலுள் மூழ்கினான். இதுதான் சீவக சிந்தாமணியின் கதைச்சுருக்கம்.

இனிச் சிந்தாமணி அரிய கருத்துக் கருவூலமாக இலங்குவதைக் காணலாம். இக்காப்பியத்தில் நம்முள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் கருத்துக்கள் படிக்கப் படிக்க ஆரா இன்பத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. நரகத்தை அடைபவர்கள் பட்டியலைக் கீழ்வரும் பாடலில் காணுங்கள் :

*" நட்பிடைக் குய்யம் வைத்தான், பிறர்மனை*
*நலத்தைச் சேர்ந்தான்,*
*கட்டழல் காமத் தீயால் கன்னியைக் கலக்கினானும்*
*அட்டுஉயிர் உடலம் தின்றான், அமைச்சனாய் அரசு*
*கொன்றான்*
*குட்டநோய் நரகந் தன்னுள் குளிப்பவர் இவர்கள்*
*கண்டாய்."*

[குய்யம் - வஞ்சனை. கட்டழல் - மிக்க நெருப்பைப் போன்ற.]

கட்டியங்காரன், மன்னனைக் கொல்லச் சதியாலோசனை நடத்தியபொழுது தருமதத்தன் என்ற அமைச்சன் இவ்வறிவுரையை அக் கட்டியங்காரனுக்குக் கூறினான். இவ்வறிவுரையின் சிறப்பை விளக்க வேண்டுவதில்லை; எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். கட்டியங்காரனே இவ்வறிவுரையை ஏற்றுத் தன் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

ஆட்சிமுறை தவறான வழியில் செல்லுமானால், நாட்டில் பல தீமைகள் உண்டாகும் என்று கீழ்வரும் பாடல் நமக்குப் புலப்படுத்துகிறது. அப்பாடல் வருமாறு:

*"சோணிலை திரிந்து நாழிகுறைபடப் பகல்கள்மிஞ்சி*
*நீணிலம் மாரி இன்றி விளைவு அஃகிப் பசியும் நீடிப்*
*பூண்முலை மகளிர் பொற்பின் கற்புஅழிந்து*
*அறங்கள் மாறி*
*ஆணைஇவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடின்*
*என்றான்."*

அரசன் தான் நடத்தும் முறைமையிற் பிறழ்வானாயின், இவ்வுலகம், கோள் நிற்கும் நிலை குலைந்து, இராநாழிகை குறையப் பகற்பொழுதுகள் மிகுந்து, மழை இல்லாது நிலம் விளைவு குறைந்து, பசிமிகுந்து, மகளிர் கற்பு அழிந்து, அறச்சாலைகள் இல்லாமல் கெடுமாம். இது அக்கால மக்கள் கருதிய கருத்து.

*"துன்பம் உற்றவர்க்கலால்*
*இன்பம் இல்லை"*

என்று சிந்தாமணி நமக்கு அரிய உண்மையை எடுத்தியம்புவதைக் காணுங்கள்.

இன்னிசை பாடும் பாடகர்கள் உடற்குற்றம் இன்றிப் பாடல் வேண்டும் என்பதைக் காந்தருவதத்தை

பாடிய முறையைக் கூறும் முகத்தான் கவிஞர் அறிவுறுத்துகிறார். காந்தருவதத்தை பாடல் பாடிய போது முகங்கோணுதல், நெற்றி சுளித்தல் முதலிய உடற் குறைகளுக்கு இடங்கொடாது பாடினளாம்.

*" கருங்கொடிப் புருவம் ஏரு ; கயல்நெடுங்*
*கண்ணும் ஆடா ;*
*அருங்கொடி மிடறும் விம்மா ; அணிமணி எயிறும்*
*தோன்று ;*
*இருங்கடற் பவழச் செவ்வாய் திறந்துஇவள்*
*பாடினளோ*
*நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ என்று*
*நைந்தார்."*

காந்தருவதத்தை வீணைப் போட்டியில் கலந்துகொண்டாள். அவள் பாடியபொழுது புருவங்கள் நெளியவில்லை; கண்கள் சுழலவில்லை; கழுத்து விம்மி வீங்கவில்லை ; பற்கள் வெளிப்படவில்லை. அங்கிருந்த அரசர்கள் எல்லாரும் 'இவள்தான் வாய்திறந்து பாடினளோ வீணை தான் பாடியதோ' என்று கண்டுபிடிக்க முடியாது வருந்தினர்களாம். பாடகர்களுக்கு இது நல்ல பாடம் கற்பிக்கும் பாடல் என்று சொல்லத் தேவையில்லை.

அறத்தைத் தேடவேண்டும் என்று இனிய பாடல்கள் நமக்கு அறிவிக்கின்றன. "வேற்றூர்க்குச் செல்லுங்கால் வழியில் உண்பதற்கு ஆற்றுணு (கட்டுசோறு) கொண்டு போகாமல் செல்வீர்களா ? செல்லமாட்டீர்கள். அது போல மேலுலகம் செல்வதற்கு அறத்தைத் தேடுங்கள். பொருளைச் சேர்த்துவைத்துச் சாகும்பொழுது வாய் பேசமுடியாத நிலையில் பொருள் திரளின் அளவைக் கையால் காட்டி அறஞ்செய்யுமாறு மனைவிக்குக் குறிப்பிடுவீர்கள். மனைவிமாரோ அப்பொருளை அறத்திற்

செலவிட எண்ணுது, 'ஐயோ! விளாம்பழம் கேட்கின் றீரே. இது விளாம்பழம் கிடைக்கும் காலம் அல்லவே! என்ன செய்வது!' என்று நடிப்பார்கள். உங்கள் எண்ணம் நிறைவேருது போகும். ஆதலால், நல்ல நினைவோடிருக்கும்பொழுதே அறம் செய்க" என்னும் பொருளுடைய கீழ்வரும் பாடல்களைப் படித்து இன்புறுங்கள் :

(1) *"வேற்றுவர் இல்லா நுமர்ஊர்க்கே செல்லினும்*
*வெகுண்டீர் போல*
*ஆற்றுணக் கொள்ளாது அடிபுறத்து வைப்பீரே*
*யல்லீர் போலும் !*
*கூற்றம் கொண்டோடத் தமியே கொடுநெறிக்கண்*
*செல்லும் போழ்தின்*
*ஆற்றுணக் கொள்ளீர்; அழகலால் அறிவுஒன்றும்*
*இலிரே போலும் !"*

(2) *"கையால் பொதித்துணையே காட்டக் கயற்கண்ணுள்*
*அதனைக் காட்டாள்,*
*"ஐயா ! விளாம்பழமே என்கின்றீர் ! ஆங்கு*
*அதற்குப் பருவம் அன்று, என்*
*செய்கோ !" எனச்சிறந்தாள் போல்சிறவாக*
*கட்டுரையால் குறித்த எல்லாம்*
*பொய்யே ; பொருள்உரையா முன்னே கொடுத்து*
*உண்டல் புரிமின் கண்டீர்."*

எத்தகைய இனிய முறையில் இப்பாடல்கள் அறம் செய்யத் தூண்டுகின்றன என்று பாருங்கள். சமண முனிவர்கள் இவ்வாறு அறிவுறுத்துவதில் தலைசிறந்த வர்கள் என்று இந்நூலில் மட்டும் அல்லாது அவர்கள் இயற்றிய வேறு நூல்களிலும் காணுதல் கூடும்.

கல்வியின் சிறப்புக் கூறும் பாடல் இது :

“கைப்பொருள் கொடுத்தும் கற்றல் ;
கற்றபின் கண்ணும் ஆகும் ;
மெய்ப்பொருள் விளக்கும் ; நெஞ்சின்
மெலிவிற்கு ஓர் துணையும் ஆகும் ;
பொய்ப்பொருள் பிறகள் ; பொன்னும் ;
புகழுமாம் துணைவி யாக்கும் ;
இப்பொருள் எய்தி நின்றீர்,
இரங்குவது என்னை என்றான்.”

பன்னூல்களையும் கற்றறிந்த பவதத்தன் என்பவன் மனைவி காட்டுவழியில் காணமற்போனாள். அவன், மனைவியைத் தேடிச் சென்றுகொண்டிருந்தான். சீவகன் எதிரே வந்து கொண்டிருந்தான். பவதத்தன் எதிரே கண்ட சீவகனை நோக்கி, “நான் பன்னூற் கேள்வியுடையேன். பவதத்தன் என்பது என்பெயர். நான் இவ்வழியில் என் துணைவியைக் காணமல் அலைகிறேன்” என்றான். அவ்வமயத்தில் சீவகன் கல்வியின் பெருமையைக் கூறி, அவன் வருத்தத்தைப் போக்க முனைந்து, “கைப்பொருள் கொடுத்தும் கற்க. கல்வி ஞானத்தை அளிக்கும் கண்ணாக விளங்கும் ; உண்மைப் பொருளைக் கொடுக்கும் ; துன்பத்தில் துணையாகும் ; பொன்னைக் கொடுக்கும் ; புகழை உண்டாக்கும். இத்தகைய நன்மையளிக்கும் கல்வியைக் கற்ற நீ கலங்குவது நன்றோ ?” என்று கூறினான். கல்வி கற்றதன் பயன் இடுக்கண் வருங்கால் நடுங்குதல் கூடாது என்பது குறிப்புப் பொருளாகும்.

கற்புடைய மாதரைக் குறித்தும் கற்பில்லாத பெண்களைக் குறித்தும் கருத்தை வெளியிடுகின்றது சிந்தாமணி.

" சாமெனில் சாதல் நோதல் ;
　　தன்னவன் தணந்த காலைப்
பூமனும் புனைதல் இன்றிப்
　　பொற்புடன் புலம்ப வைசிக்
காமனை என்றும் சொல்லார்
　　கணவற்கை தொழுது வாழ்வார் ;
தேமலர்த் திருவோடு ஒப்பார் ;
　　சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார்.

கணவன் சாகின் சாக; நோவின் நோக; கணவன் இறந்தால் பூவும் அணிதல் இன்றி அழகுடனே தனிப்பத் தங்கிக் காமம் என்று பெயரும் கூறுராய்க் கணவனையே வணங்கி வாழ்வார். அவனுக்கு இலக்குமி போன்று இருப்பார். அவனுடைய துன்பத்தை நீக்குவார். இத் தகையோரே கற்புடைய மகளிராவர்.

ஆனல், கற்பில்லாதவள் எங்ஙனம் இருப்பாளென் றறிய விரும்பினல் கீழ்வரும் பாடல்களைப் பாருங்கள் :

" பெண்ணெனப் படுவ கேண்மோ !
　　பீடுஇல ; பிறப்பு நோக்கா ;
உண்ணிறை உடைய அல்ல ;
　　ஓராயிரம் மனத்த வாகும் ;
எண்ணிப்பத்து அங்கை இட்டால்
　　இந்திரன் மகளும் ஆங்கே
வெண்ணெய்க்குன்று எரியுற் றுல்போல்
　　மெலிந்துபின் நிற்கும் அன்றே."

கற்பில்லாத பெண் என்று கூறப்படுவனவற்றின் இயல்பு என்ன ? மனவலிமையுடைய அல்ல; குடிப் பிறப்புக் கெடும் என்று பாரா ; மனவுறுதியுடையன அல்ல; ஓராயிரம் மனத்தவாம். இந்திரன் மகளாயிருந்



காமராசர் பல்க

தாலும் பத்துப் பொன்னை எண்ணி உள்ளங்கையில் வைத்தால் உருகிப் பின்னே நிற்பாள். இங்ஙனம் கூறினர் கவிஞர். உயர்திணையாகக்கூடக் கூருமல் ஆசிரியர் இப் பெண்களை அஃறிணைப் பொருளாகவே சொல்வதைக் காணுங்கள். கற்பில்லாத பெண்களின்மேலுள்ள வெறுப்பினுல், கவிஞர், இந்திரன் மகளாயினும் உறுதியில்லாதிருந்தால் காசுக்கு இணங்கிவிடுவாள் என்று பாடியுள்ளார். கவிஞர்க்கு இத்தகைய பெண்கள்மேல் இரக்கம் இல்லைபோலும், போகட்டும்.

இங்ஙனம் அறத்தைக் கூறும் சிந்தாமணியில் காதலின் இயல்பையும் கருணை வீரத்தின் மேன்மையையும் நிரம்பக் காணலாம். கவிச்சுவை ஒன்பதனுள் இன்பச் சுவையே சிறந்தது என்பர். அந்த இன்பச் சுவையை இந்தப் பெருங் காப்பியத்தில் எந்த முறையில் அமைந்து கிடக்கிறது என்று பார்ப்போம். காதற்சுவைக்கு இது எடுத்துக் காட்டு :

*"கற்சுணம் செய்ததோள் மைந்தர் காதலால்*
*நற்சுணப் பட்டுடை பற்ற, நாணினுல்*
*பொற்சுணத் தால்விளக்கு அவிப்பப் பொங்கிய*
*பொற்சுணம் புறம்பனை தவழும் பொற்பிற்றே."*

காதலர்கள், தங்கள் காதலிமார் ஊடல் கொண்டு போகும் பொழுது தம் காதலால் அவர்களுடைய சேலையைப் பிடித்து இழுக்கிருர்கள். சேலை நெகிழ்கிறது, நாணமுற்ற மகளிர் கையிலிருந்த சுண்ணப்பொடிகளை விளக்கின்மேல் தூவி அணைத்து விடுகிருர்களாம். அங்ஙனம் எறிந்த சுண்ணம் மருதநிலத்தே பரவிப் பொலிவை உண்டாக்குகிறதாம்.

மற்ருேர் எடுத்துக்காட்டு. கேமசரி என்ற பெண்ணின் இல்லத்திற்கு அவள் தந்தையால் அழைக்கப்பட்டுச்

சென்ற சீவகன், அப்பெண்ணின் காதல் நோக்குத் தனக்குப் புலப்பட்ட முறையைக் கூறும் முகமாக எழுந்த செய்யுள் இது:

*"காதன்மை கண்ணுளே அடக்கிக் கண்ணெனும்*
*தூதினல் துணிபொருள் உணர்த்தித்*
*தான் தமர்க்கு*
*ஏதின்மை படக்கரந் திட்ட வாள்கண்நோக்கு*
*ஓதம்நீர் அமுதமும் உலகும் விற்குமே."*

சீவகநம்பியின் அழகில் கேமசரி ஈடுபட்டுத் தன் உள்ளத்தில் எழுந்த காதலைப் பிறர் அறியாதவாறும், சீவகன் மட்டும் அறிந்து கொள்ளவும் விரும்பித் தன் அளவிகந்த காதலைத் தன் கண்ணுள்ளே அடக்கினளாம். உள்ளத்தே தோன்றி வழிந்துவிட்ட காதலை எங்கே அடக்குவது? அதைப் பயன்படுமாறும் அடக்கிவைக்க வேண்டுமே. கண்தானே காதலைத் தெரிவிக்க வல்லது. ஆதலால், அவள் அதனைக் கண்ணில் அடக்கினள். பலர்முன், 'என்னை நீ மணந்துகொள்ள வேண்டும்' என்று ஒரு பெண், வாயினல் சொல்ல முடியுமா? முடியாது. எனவே, அவள் அதனைக் கண்ணகிய தூதினல் கூறினள். கண்ணோடு கண் இணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொல்லுக்கு என்ன வேலை இருக்கிறது? காதலைக் கேமசரி கண்ணல் தெரிவித்துவிட்டாள்; ஆனல், ஒன்றும் தெரியாதவள்போல் இருந்தாள். சீவகன் அவளுடைய கண்காட்டிய திறனை வியந்து, "இவள் கண் நோக்குப் பாற்கடலில் தோன்றிய அமிர்தத்தையும் பரந்த பெரிய உலகத்தையும் விலையாக விற்கும்" என்று கருதினனம்.

பெரு வீரத்தையும் வீரனுடைய அருள்மறத்தையும் பல இடங்களில் பார்க்கலாம். இது கருணைவீரத்தை மட்டும் காட்டுவது:

"வீறின்மையின் விளங்குஆம்என மதவேழமும்
எறியான்;
ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில் என்று
எறியான்;
மாறன்மையின் மறம் வாடும் என்று
இளையாரையும் அறியான்;
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில்
உழவன்;

ஒரு வீரன் யானையாயினும் விலங்குதானே என்று யானையுடன் போர் செய்யவில்லை; பிறரால் சிறிது வெட்டுண்ட வீரனை எச்சில் என்று கருதி வாளால் வெட்டவில்லை; தனக்கு இளையாரோடு போர் செய்தல் தன் வீரத்துக்கு இழுக்குண்டாகும் என்று போர் புரியவில்லை. அறமாகாது என்று முதியோரோடும் போர் புரியவில்லை அவ்வீரன் இக்குறைகள் இல்லாதவரோடே போர் செய்தான். இத்தகைய கருணை மறத்தை, அருள் வீரத்தை நம் நாடு அன்று செம்மையாகப் பெற்றிருந்ததை இயம்புகிறது இப்பாடல்.

இனி, இரண்டு உவமை நயங்களை மட்டும் கண்டு செல்வோம். பொனங்குடி அமிர்தனுளும் பொன்னெடுங்குன்றனும் காதல் இன்பத்தை நுகர்ந்து கொண்டு வாழ்ந்து வந்தார்கள். மன்னன் சச்சந்தன் கடமையை மறந்து காதலில் மூழ்கிவிட்டான். கவிஞர் இதனைக் கூறும்பொழுது பொருத்தமான உவமையை அமைத்துக் கூறியுள்ளதைக் கீழ் வரும் பாடல் தெரிவிக்கிறது. அது வருமாறு:

"மண்ணகம் காவலின் வழுக்கி மன்னவன்
பெண்ணருங் கலத்தொடு பிணைந்த பேரருள்
விண்ணகம் இருள்கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற உரோணியோடு ஒளித்தது ஒத்ததே."

சந்திரன் உலகிற்கு ஒளி வீச வேண்டும். அதுதான் சந்திரனுக்குரிய கடமை. ஆனால், சந்திரன் அக்கடமையை செய்யாமல் உரோகணி என்னும் மனைவியோடு இருந்து காதல் இன்பத்தை நுகரும் பொருட்டு மறைந்திருக்கிறான். அது போல மன்னன் சச்சந்தனும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நாட்டை ஆள்வதை விடுத்துத் தன் மனைவியாகிய விசயமாதேவியுடன் கடமையை மறந்து இன்பம் நுகரத் தனித்து வாழலானான். இதனைக்கூறவந்த கவிஞர் நயம் பட மண்ணகம் காவலின் வழுக்கி மன்னவன் விசையை யுடன் பிணைந்த பேரருள், விண்ணகம் இருள் கொளச் செய்து வெண்மதி உரோகணியோடு ஒளித்ததை ஒத்தது என்று பொருத்தமாகக் கூறினர்.

மற்றோரிடத்தில் இடையர் குலத்தைச் சேர்ந்த நந்தகோன் தன் மகள் கோவிந்தையின் அழகை வருணிக்கும் உவமையைக் காண்கிறோம். ஆசிரியர் அங்கே ஆயர் வாழ்க்கையிலே நாள்தோறும் காணப்படும் பொருளைக்கொண்டே உவமையைக் கூறியுள்ளார்.

> *"வெண்ணெய் போன்று ஊறு இனியள்; மேம்பால்*
> *போல் தீஞ்சொல்லள்;*
> *உண்ண உருக்கிய ஆன்நெய்போல் மேனியள்;*
> *வண்ண வனமுலை மாதர் மடநோக்கி*
> *கண்ணும் கருவிளம் போது இரண்டே கண்டாய்."*

கோவிந்தையின் உடம்பைத் தொட்டால் வெண்ணெய் போல் மென்மை கொண்டிருக்கும். அவள் சொல்லோ விரும்பும் இனிய பால் போல் இருக்கும். உடலின் நிறமோ உண்ண உருக்கிய பசுவின் நெய் போல் இருக்கும். நந்தகோன் இங்ஙனம் தன் இடையர் குலத் துக்கு ஏற்பத் தான் அறிந்த பொருள்களையே கோவிந்

தைக்கு உவமையாகக் கூறியிருக்கும் நயம் பாராட்டற்குரியது.

சிந்தாமணியில் சங்க நூல்களின் கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ள நயமும் படித்து இன்புறத்தக்கது. புறநானூற்றில் மோசிகீரனுர் என்ற சங்க காலத்துச் சான்றோர் ஒருவர் அரசனே மக்களுக்கு உயிர் என்னும் கருத்தை,

*"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;*
*அதனுல், 'யான்உயிர்' என்பது அறிகை*
*வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே"*

என்று பாடினுர். சிந்தாமணியார் இக்கருத்தைப் பொன் போலப் போற்றி,

*"நெல்லுயிர் மாந்தர்க்கு எல்லாம் நீருயிர் இரண்டும் செப்பின்*
*புல்லுயிர் புகைந்து பொங்கும் முழங்குஅழல் இலங்கு வாட்கை*
*மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்*
*நல்லுயிர் ஞானந் தன்னுள் நாமவேல் நம்பி என்ருன்"*

என்று கூறினுர். புறநானூற்றுக் கருத்தையே விரிவாகக் கூறுதலை இப்பாடலில் காணலாம்.

உலகப் பெருநூல்கள் இணையற்று விளங்கும் திருக்குறளிலிருந்து சிறந்த பாக்கள் சிலவற்றைச் சிந்தாமணிக் காரர் தம் பாடலில் போற்றி வைத்து உரை கூறுவார் போலப் பொருள் விரித்துக் காட்டியிருக்கும் நயமும் படித்து இன்புறுதற்குரியதாகும்.

'இடுக்கண் வந்தால் சிரித்துவிடு. அதுதான் துன்பத்தைப் போக்கும் அரிய கருவி' என்னும் கருத்தைக் கூறுவது கீழ்வருங் குறட்பா :

*" இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை*
*அடுத்து ஊர்வது அஃதுஒப்பது இல்."*

இந்த அரிய குறட்பாவின் கருத்தை விரித்துக் காட்டும் சிந்தாமணிப் பாட்டைப் பாருங்கள். அப்பாட்டு இது:

*" இடுக்கண் வந்துற்ற காலை*
*எரிகின்ற விளக்குப் போல*
*நடுக்கம்ஒன் றுனும் இன்றி*
*நகுக ; தாம் நக்க போழ்து அவ்*
*இடுக்கணை அரியும் எஃகுஆம் ;*
*இருந்து அழுது யாவர் உய்ந்தார் ?*
*வடுப்படுத்து என்னை ஆண்மை ?*
*வருபவர் துறுங்க என்றே ?"*

கவிஞர், குறட்பாவில் கூறிய கருத்தை எடுத்து விளக்கம் தந்துள்ள நயம் மிக மிக இனிதாக இருப்பதைக் காண்க.

இங்ஙனம் சொல்நயம், பொருள்நயம், உவமைநயம் முதலியவற்றுல் சிறப்புற்று ஒன்பான் சுவைகளையும் தன்பாற்கொண்டு ஒப்புயர்வற்றுக் கற்பார் உள்ளத்தைக் கொள்ளும் அரும்பெருங்காப்பியம் சீவக சிந்தாமணி என்பது தமிழுலகம் நன்கறியும். இன்பச் சுவையையே பெரும்பாலும் இக்காப்பியம் தழுவி நிற்பினும், அவ்வின்பத்திலேயே கற்பாரை விழுந்துவிடச் செய்யாது, ஞானநெறியை இனிய முறையில் உணர்த்துகிறது என்பதையும் மறந்துவிடலாகாது. இப்பெருங் காப்பியத்தை இயற்றிய துறவி திருத்தக்கதேவர் ஞான

தைக்கு உவமையாகக் கூறியிருக்கும் நயம் பாராட்டற் குரியது.

சிந்தாமணியில் சங்க நூல்களின் கருத்துக்கள் எடுத் தாளப்பட்டுள்ள நயமும் படித்து இன்புறத்தக்கது. புற நானூற்றில் மோசிகீரனுர் என்ற சங்க காலத்துச் சான்ருேர் ஒருவர் அரசனே மக்களுக்கு உயிர் என்னும் கருத்தை,

*"நெல்லும் உயிரன்றே ; நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ;*
*அதனல், 'யான்உயிர்' என்பது அறிகை*
*வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே"*

என்று பாடினர். சிந்தாமணியார் இக்கருத்தைப் பொன் போலப் போற்றி,

*"நெல்லுயிர் மாந்தர்க்கு எல்லாம் நீருயிர் இரண்டும் செப்பின்*
*புல்லுயிர் புகைந்து பொங்கும் முழங்குஅழல் இலங்கு வாட்கை*
*மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்*
*நல்லுயிர் ஞானந் தன்னுள் நாமவேல் நம்பி என்ருன்"*

என்று கூறினர். புறநானூற்றுக் கருத்தையே விரிவாகக் கூறுதலை இப்பாடலில் காணலாம்.

உலகப் பெருநூல்கள் இணையற்று விளங்கும் திருக் குறளிலிருந்து சிறந்த பாக்கள் சிலவற்றைச் சிந்தாமணிக் காரர் தம் பாடலில் போற்றி வைத்து உரை கூறுவார் போலப் பொருள் விரித்துக் காட்டியிருக்கும் நயமும் படித்து இன்புறுதற்குரியதாகும்.

'இடுக்கண் வந்தால் சிரித்துவிடு. அதுதான் துன்பத்தைப் போக்கும் அரிய கருவி' என்னும் கருத்தைக் கூறுவது கீழ்வருங் குறட்பா :

*" இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை*
*அடுத்து ஊர்வது அஃதுஒப்பது இல்."*

இந்த அரிய குறட்பாவின் கருத்தை விரித்துக் காட்டும் சிந்தாமணிப் பாட்டைப் பாருங்கள். அப்பாட்டு இது:

*" இடுக்கண் வந்துற்ற காலை*
*எரிகின்ற விளக்குப் போல*
*நடுக்கம்ஒன் றானும் இன்றி*
*நகுக ; தாம் நக்க போழ்து அவ்*
*இடுக்கணை அரியும் எஃகுஆம் ;*
*இருந்து அழுது யாவர் உய்ந்தார் ?*
*வடுப்படுத்து என்னை ஆண்மை ?*
*வருபவந் துறுங்க ளன்றே ?"*

கவிஞர், குறட்பாவில் கூறிய கருத்தை எடுத்து விளக்கம் தந்துள்ள நயம் மிக மிக இனிதாக இருப்பதைக் காண்க.

இங்ஙனம் சொல்நயம், பொருள்நயம், உவமைநயம் முதலியவற்றால் சிறப்புற்று ஒன்பான் சுவைகளையும் தன்பாற்கொண்டு ஒப்புயர்வற்றுக் கற்பார் உள்ளத்தைக் கொள்ளும் அரும்பெருங்காப்பியம் சீவக சிந்தாமணி என்பது தமிழுலகம் நன்கறியும். இன்பச் சுவையையே பெரும்பாலும் இக்காப்பியம் தழுவி நிற்பினும், அவ்வின்பத்திலேயே கற்பாரை விழுந்துவிடச் செய்யாது, ஞானநெறியை இனிய முறையில் உணர்த்துகிறது என்பதையும் மறந்துவிடலாகாது. இப்பெருங் காப்பியத்தை இயற்றிய துறவி திருத்தக்கதேவர் ஞான

நெறியை வற்புறுத்துவதை மறந்துவிடவில்லை. இக் கவிஞர் பெருமான்,

*" மன்னுநீர் மொக்குள் ஒக்கும்*
*மானிடர் இளமை ; இன்பம்*
*மின்னின்ஒத்து இறக்கும் ; செல்வம்*
*வெயிலுறு பனியின் நீங்கும் "*

என்றும்,

முடிவாக முத்தி இலம்பகத்தில்,

*" தன்னுயிர் தான்பரிந்து ஓம்பு மாறுபோல்*
*மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்*
*இன்னுயிர்க்கு இறைவனாய் இன்ப மூர்த்தியாய்*
*பொன்னுயி ராய்ப்பி றந்து உயர்ந்து போகுமே "*

என்றும் தெரிவித்துக் கற்பாரை ஞானநெறிக்கு அழைத்து செல்வதைக் காணலாம்.

தனிமையில் இனிமை தருவது இலக்கியம். ஓய்வு நேரத்தை இனிய முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்றது இலக்கியம். உள்ளத்தைப் பண்படுத்தவல்லது இலக்கியம். இந்த வகையில் சிந்தாமணிக் காப்பியம் தந்திடும் நந்தா இன்பம் அளவற்றது எனலாம். தெள்ளூற்ற தமிழமுதின் சுவை காண விழைவார், சிந்தாமணிக் கடலில் படிந்து திளைப்பாராயின், அழியாத இலக்கிய இன்பத்தைக் காண்பர் என்பது உறுதி.

# மணிமேகலை

# வான்புகழ் மேகலை

கா. அப்பாதுரை M.A.L.T.

புத்தர் விழாவை யார் யாரோ கொண்டாடியது கண்டு தமிழரும் கொண்டாட முனைந்துள்ளனர். ஆனால் மனித உலகில் பாதிப்பேர்—கிட்டத்தட்ட 100 கோடிப் பேரான புத்தசமய உலகினருக்குத் தமிழகம் அளித்த செல்வத்தை, மணிமேகலைக் காப்பியத்தை, அவ்விழாநாளில் தமிழர் நினைத்ததில்லை. புத்தரைத் தமிழர் கொண்டாட விரும்பினால், அதற்குச் சிறந்த வழி, மணிமேகலை விழாவை அன்று நடத்துவதுதான்—மணிமேகலை மாநாட்டை அன்று தொடங்குவது, அல்லது உலகமொழிகளில் மணி மேகலைச் சிறப்பை எடுத்துக்கூறும் மொழிபெயர்ப்புகளை அரங்கேற்றுவதுதான்! ஏனெனில் மணிமேகலை தமிழுக்குப் பெருஞ் சிறப்பளிக்கும் காப்பியம் மட்டுமல்ல, புத்த நெறிக்கு அதனிலும் பெருஞ் சிறப்பளிக்கும் ஏடும் அதுவே! அதைத், தமிழர் போற்றாதது தமிழருக்கு எவ்வளவு இழுக்கோ, அதே அளவு அதைப் புத்த சமய

உலகம் போற்றுதது புத்த சமய உலகுக்கே மன்னிக்க முடியாத பேரிழுக்காகும்.

ஆனல், தமிழரும் அவர்களை ஆளும் இனமும் மணிமேகலையைப் புத்தஉலகத்துக்குக் காட்டினுல்தானே! தமிழர் அடிமையினமாய், தம் கலைபோற்றுது பிறர் கலை போற்றி, தம்பொன் கலை யறியாதுபிறர் பொன்கலை யறியப் பாடுபடும் இன்றைய நிலையில், ஆளப்படும் இனமாக இல்லாமல், கிரேக்கரைப்போல மாண்ட பேரினமாய் இருந்திருந்தால்கூட, தமிழகத்தில் புதையுண்டு கிடக்கும் திருக்குறளையும், சிலப்பதிகாரத்தையும், மணிமேகலை யையும் சங்க இலக்கியக் கலை மணிகளையும் வெளியுலக மாவது கண்டெடுத்துப் பயன்கண்டிருப்பது உறுதி! அந்நிலை ஏற்பட்டிருந்தால், மேலை உலகத்தினர் திருக் குறளையும்; சீன சப்பானியக் கீழை உலகத்தினர் மணிமேகலையையும்; இருதிசையிலும் அழகுக் கலைஞர் சிலப்பதிகாரத்தையும், சங்க இலக்கிய ஓவியப் படிமங்களை யும் கண்டுணர்ந்து கட்டாயம் தமதாக்கியிருப்பர்!

**புத்தசமயமும் மணிமேகலையும்**

புத்தசமயம் சார்ந்த ஏடுகள் உலகில் பல மொழிகளில் இருக்கின்றன. ஆனல் புத்தசமயச் சார்பான இத்தகைய நல் இலக்கியம் சமஸ்கிருதத்திலோ—பாளியிலோ—வேறு எந்த உலக மொழிகளிலோ—கிட்டத்தட்ட 50 கோடி புத்தசமயத்தினர் பேசும் சீன மொழியிலோ, 8 கோடி புத்தசமயத்தினர் பேசும் சப்பான் மொழியிலோகூடக் கிடையாது. உண்மையில் புத்தசமயக் காவியங்கள் என்று வகுத்துக் கண்டால்கூட, சமஸ்கிருதத்தில் ஒன்றும், பாகத மொழியில் இரண்டும், தமிழில் மணி மேகலையுமாக நான்கே உள்ளன என்று அறிகிருேம். இவற்றுள் சமஸ்கிருதத்தில் அசுவகோஷன் என்ற புலவன்

எழுதிய புத்தசரிதம் ஒன்றுதான் மணிமேகலையுடன் சமகாலத்தது என்று கூறத்தக்கது. பண்பிலோ, மணிமேகலையே புத்த உலகின் தலைசிறந்த காப்பியம் என்பதை அவற்றைச் சிறிது ஒத்துப்பார்த்த எவரும் எளிதில் காண்பர். எனவே காலத்தாலும், இலக்கியப் பண்பாலும் மணிமேகலைக்குப் புத்தசமய உலகில் ஈடுசோடு எதுவும் இல்லை.

## தமிழிலக்கியத்தில் மணிமேகலையின் இடம்

தமிழிலக்கிய வானில், திருக்குறள் ஒரு கதிரவன். மணிமேகலை ஒரு பால் நிலாவெறிக்கும் தண்மதியம். சிலப்பதிகாரம் பன்மணி ஒளி வீசும் ஒரு வானவில். சங்க இலக்கியப் பாடல்கள் யாவும் சேணில் நிலவும் ஒளிக் கோளங்களாகிய விண் சுடர்மணிகள்.

தமிழர் பெருங் காப்பியங்கள் என்று வகுத்த ஏடுகள் ஐந்து. அவை மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. சிறு காப்பியங்கள் என்றும் ஐந்து வகுக்கப்பட்டிருந்தன. அவை சூளாமணி, உதயணன் கதை, நீலகேசி, நாககுமார சரிதம், யசோதர காவியம் என்பவை. இவையே காலத்தால் முந்தியவையும், தன்மையால் சிறந்தவையும் ஆகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தப் பத்துத் தமிழ்க் காப்பியங்களில் பெருங்காப்பியங்களில் மூன்றும், சிறு காப்பியங்களில் இரண்டு அல்லது மூன்றுமே நமக்கு முழு அளவில் வந்தெட்டியுள்ளன. மீந்தவற்றுள் நாககுமார காவியம் பெயர்மட்டிலுமே கிடைத்துள்ளது. மற்றவற்றில் சில பல பாடல்களோ, பகுதிகளோ தான் கிடைத்துள்ளன.

இவற்றுள்ளும் மணிமேகலையும் சிலப்பதிகாரமும் பழமை மிக்க முதற் காவியங்கள் மட்டுமல்ல. தமிழ்ப்

பண்பிலும் தமிழர் பண்டைக்கலைப்பண்பாட்டிலும் தோய்வுற்று, சங்க இலக்கியக் கலைக்கோயிலிலேயே நடு இடம் வகிக்கத் தகுந்த தனிப்பெரும் சிறப்புடையவையும் அவையே. மணிமேகலை மதுரைக் கூலவாணிகன் சாத்தனுரால் இயற்றப்பட்ட பின்னரே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினுரென்று சிலப்பதிகாரப் பதிகமும் உரையும் தெளிவுபடுத்துகின்றன. ஆகவே தமிழரின் காப்பியங்களுள் நமக்குக் கிடைத்துள்ள முதல் முதல் காப்பியம் மணிமேகலையே என்று கூறலாம். தவிர, சிலப்பதிகாரம் பிற்காலத்தாரால் காப்பியம் என்று கருதப்படினும், அது உண்மையில் முத்தமிழ் வளங்கொழிக்கும் ஒரு நாடகமேயாகும். பிற்காலத் தாழிசை மூவடுக்குப் போல, கிரேக்கரின் முத்தொடர் நாடகங்களைப்போல, புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று நகரங்களையும் மூன்று அரங்கங்களாகக்கொண்டு ஆடப்பெறும் மும்மை நாடகங்களின் தொகுப்பாகவே அது இலங்குகின்றது.

எனவே சங்ககாலத்திய முதற் காப்பியமாக மட்டுமன்றி, சங்ககாலத்தின் ஒரே காப்பியமாகவும் அது இயங்குகின்றது என்னல் வேண்டும்.

**சங்க இலக்கியமும் மணிமேகலையும்**

கலையில் மனிதன் காணும் அழகு பொதுவாக இருவகைப்பட்டது. அவன் சிறுமையில் நுண்ணய அழகு காண்கிருன். பெருமையில் பாரிய வீறமைதியும் பெருமித உணர்வும் காண்கிருன். பண்டை மேலையுலகிலே இரு நாகரிகங்கள் இந்த இரு வேறுவகைகளையும் இரு வேருகவே காட்டும் முறையில் அமைந்திருந்தன. கிரேக்கர், அதாவது, சங்க இலக்கியம் குறித்த பெயருடன் கூறுவதானுல் யவனர், சிற்பத்திலும் படிமக்கலையிலும் இலக்கியத்திலும் நுண்ணய அழகையே மிகுதிகண்டனர்.

ஆனால் உலகம் முன்னும் பின்னும் அத்தகைய அழகை என்றுமே கண்டதில்லையென்று மேலைநாட்டுக் கலை விற்பனர் கருதியுள்ளனர். இதுபோலவே உரோமர் சிற்பம் பாரிய வீறமைதியை உலகில் வேறெந்த இனத்தையும் விடச் சிறப்பாகக் காட்டிற்று என்றும் அவர்கள் கருதுகின்றனர். கிரேக்கரின் மிகப் பெரிய படைப்புக்களில்கூட நாம் இந்த நுண்ணயத்தையும்; உரோமரின் மிகச் சிறு படைப்பில்கூட இந்த வீறமைதியையும் காணலாம்.

வட இந்திய—இஸ்லாமியக் கலைப்படைப்பாகிய தாஜ்மகாலிலும் ஜும்மா மஸ்ஜிதிலும் இந்த இரு பண்புகளும் சரியாக அமைந்துள்ளதனாலேயே அவை மேனாட்டுக் கலைஞரின் ஏகோபித்த போற்றுதலுக்கு ஆளாகியுள்ளன. மதுரை திருமலை நாய்க்கன் மகாலும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலும் தனிப்பட்ட உரோமப் பண்பை மட்டிலும் காட்டுகின்றன. திராவிடக் கலை என்று கூறப்படும் பல்லவர்—ஆந்திரர் காலச் சிற்பங்களும் அதேகால அஜண்டா, சித்தன்ன வாசல் ஓவியங்களும் சங்க இலக்கியமும் பொதுவாகக் கிரேக்கர் நுண்ணயப் பண்பைச் செவ்வையாகக் காட்டுகின்றன.

சங்க இலக்கிய காலத்திய, அல்லது அதற்கு முற்பட்ட தமிழகக் கலைப்படைப்புக்கள் எவையேனும் நமக்கு மீந்திருக்குமானால், அவை கிரேக்கர் நுண்ணய அழகையும் உரோமர் பாரக்கலையின் வீறமைதியையும் கட்டாயம் வென்றிருக்கும் என்றுதுணிந்து கூறலாம். பல்லவர் காலத்துக்கு முற்பட்ட சங்க இலக்கியம் இதற்குச் சான்று. தவிர, மேலை நாடுகளில் கிரேக்க, உரோம கலைப்பண்புகளுக்கு அவற்றுக்கும் முற்பட்ட நடுநிலக் கடல் நாகரிகப்பண்பே மூலமுதல் ஆகும். தென்னாட்டின் சிந்துவெளிக்கால நாகரிகம் அவற்றுடன் தொடர்பு

பட்டது மட்டுமல்ல! கிரேக்க கலையின் அழகைப் பழிக்கும் கலைப்பொருள்கள் கிரேக்க நாகரிகத்துக்குச் சில பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே இங்கே காணப் படுகின்றன.

நடுநிலக் கடலக நாகரிகத்தின் மறுமலர்ச்சியாக எழுந்த இத்தாலிய மறுமலர்ச்சிக் கலைஞர்களான ரபேல், மைக்கேல் ஏஞ்சலோ, லியானுர்டோ டாவின்சி, பெட்ரார்க், தாங்தே ஆகியவர்கள் உரோம கிரேக்க கலைப்பண்புகளைப் புதுப்பித்ததுபோலவே, ஆந்திர பல்லவக் கலையும், வடநாட்டுத் தாஜ்மகாலும், இரஜபுத்திரர் கலையும் வரலாற்றுக்கு முற்பட்ட திராவிட—நடுநிலக் கடலக (*Proto-Indo—Mediterranean*) நாகரிகக் கலையின் மறுமலர்ச்சி களே யாகும்.

சங்க இலக்கியத்தில் நாம் பொதுவாகக் காணும் மாய அழகு கிரேக்கரின் நுண்ணய அமைதியழகே. ஆனல் கிரேக்கரிடமிருந்ததைவிடப் பன்மடங்கு உயரிய அறிவுத் திறமும் கலைத்திறமும் அதில் இணைந்து காணப் படுகின்றன. இதனுலேயே பலர் அதன் அறிவுத் திறத்தில் சிக்கி அதன் பொன் வண்ணப் பொலிவைக் காணுது போகின்றனர். உண்மையில் சங்க இலக்கியப் பாடல்களின் வனப்பை பொன் வெள்ளி மணிகளிலும், தந்தத்திலும், பட்டிழையிலும், பூவிலும், பொன்னுலிலும் இழைக்கப்படும் நுண்ணழகுப் பொருள்களுக்கே ஒப்பிடலாம்.

நமக்குக் கிடைத்துள்ள சங்கப்பாடல்களில் மிகப் பெரும்பாலானவை—கிட்டத்தட்ட அனைத்துமே தொகை நூல்கள் அல்லது பொறுக்கு மணிகளின் திரட்டுக்கள். ஆதலால் நாம் அவற்றின் மூலம் தமிழரின் நுண்ணய இழைப்புத் திறத்தையே பெரிதும் காண

முடிகிறது. பருமை, பெருமை, பெருமித வீறுசார்ந்த திறங்களை அவ்வளவாகக் காணமுடியவில்லை. இழைத் துருவாக்கிய முத்துக்களாகவே—பெரிய சிறிய முத்துக்களாகவே—அவை திகழ்கின்றன. திருக்குறட்பாக்களும் குறுந்தொகைப் பாடல்களும் மலையைக் கடுகளவாக அடக்கிய செறிந்த முத்துக்கள். பத்துப்பாட்டின் பாடல்களோ முந்நூறு ஐந்நூறு எழுநூறு அடிவரை நீண்ட பாரிய முத்து உருவங்கள்—அவ்வளவே! நெடுநல்வாடை ஒன்றே நுண்ணயம் கெடாமல் கிரேக்க வீறமைதியை—கிரேக்கரிலும் ஸ்பார்ட்டா நகரத்தவருக்கே சிறப்பாய் உரிய செறிந்த வீறமைதியை—எட்டுகிறது. பேரளவான பார அகலக்கலை சங்க இலக்கியத்தில் நாம் பெரிதும் காணமுடியாத ஒன்றாகும்.

சங்ககால ஏடுகளான சிலம்பும் மேகலையும் இக்குறைபாட்டை மிகப் பேரளவில் நிறைவு படுத்துகின்றன. ஏனெனில் அவை பாரக் கவிதை மட்டுமல்ல. கிரேக்கர்களிடையே கலைஞன் பீடியாஸ் நிருமித்த பாரச்சிலைகளைப் போல அவை கிரேக்க, சங்க இலக்கியப் பண்பான நுண்ணயமும், உரோமருக்குரிய பார வீறமைதியும் இரண்டறக் கலந்து அதிசயப் படைப்புக்களாய்த் திகழ்கின்றன.

**காப்பிய உலகில் மேகலை**

கவிதைப் பண்புக்கும் கலைப்பண்புக்கும் உலகிலேயே முதல் முதல் முழுநிறை இலக்கணம் கண்டு வகுத்தவன் சமஸ்கிருதப் பெருங் கலைவாணன் தண்டி. இவன் எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் காஞ்சியில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற இராசசிம்ம பல்லவன் (685—705) ஆட்சியில் வாழ்ந்தவன். ஆனால் எக்காரணத்தாலோ காப்பிய இலக்கண உணர்வும் உயிர்த்துடிப்புடைய காப்பியங்களின் படைப்பும் அவனோடு மறைந்து

விட்டன. அவனுக்கு முன் தமிழில் காப்பியங்கள் பல எழுந்தன. சமஸ்கிருதத்திலும் அவனுக்கு முன் காளிதாசனின் இரகு வம்சம், குமார சம்பவம் போன்ற சிறந்த காப்பியங்கள் படைக்கப்பட்டிருந்தன. ஆனல் அவன் நூற்ருண்டுக்குப் பின் தமிழிலும் காப்பியங்கள் எழவில்லை. சமஸ்கிருதத்திலும் காப்பியங்கள் மரபிழந்தன. பின்னுட்களில் இந்த இரு மொழிகளேயுமே பின்பற்றிய மற்ற எல்லா இந்திய மொழிகளும் இராமாயண பாரத புராணங்களேக் காப்பியங்களாகக்கருதி மொழிபெயர்த்தன. தமிழ், சமஸ்கிருத உயிர்க்காப்பியங்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டன. இடைக்கால, பிற்கால மொழிப் புலவர்கள் அவற்றை மொழிபெயர்க்கவோ, பின்பற்றவோ கனவு காணவில்லை. அவற்றின் பண்பையே மறந்தனர்!

காப்பியங்களேப் பெருங்காப்பியங்களென்றும் சிறு காப்பியங்களென்றும் வகுத்த தமிழர்கள், கம்ப ராமாயணத்தையோ வில்லிபுத்தூரார் பாரதத்தையோ, பெரிய புராணம், திருவிளேயாடற் புராணம், கந்தபுராணம் ஆகியவற்றையோ காப்பியங்கள் என்று குறித்ததும் இல்லை. பெருங்காப்பியங்களாகவோ, சிறு காப்பியங்களாகவோ, புதுக்காப்பியங்களாகவோ கூட வகுக்க எண்ணவில்லை. அவை காப்பியங்களல்ல, புராண இதிகாசங்களே என்று விடுத்தனர்!

சமஸ்கிருத வாணர்கள்கூட வால்மீகி ராமாயணமோ, வியாசர் பாரதமோ காப்பியங்களென்று கருதவில்லை.

நம் தற்காலத் தமிழ்ப்புலவர் உலகம் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும்.

மேனுட்டு மொழிகள் படித்த தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழாராய்ச்சியாளர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

இராமாயண பாரதங்கள் சமயச் சார்பானதனுலோ காவிய எல்லைகடந்து நீண்டுவிட்டதனுலோ, மிகப் பழைமையானவையாதலாலோ காப்பியங்களாகச் சேர்க் கப்படவில்லை என்று சிலர் போலிவிடையிறுக்கக்கூடும். ஆனுல் இது சரியான விளக்கமல்ல, ஆதாரமாகக் காட்டும் செய்திகளும் சரியானவையல்ல. பாரத இராமயணக் கதைகள் பழமையானவையே. தவிர இன்றிருக்கும் பாரத இராமாயண ஏடுகளல்ல. மேலும் பழமையும் பேரளவும் காப்பியத்துக்குக் குறைகள் ஆகமாட்டா. புத்தசரிதம் முற்றிலும் சமயச் சார்பானதே குணுட்டியன் 'பேய்மொழி'யில் இயற்றிய 'பெருங்கதை' வால்மீகி இராமாயணத்துக்கும் பாணினிக்கும் முற்பட்டது. வால் மீகி இராமாயணம் 24000 பாடல்களும் வியாசபாரதம் 100,000 பாடல்களும் உடையதாயிருக்க, அது 700,000 பாடல்கள் உடையதா 'யிருந்ததாகவும், கடைசிக் காண்டமே 100,000 பாடல்களுடையதாயிருந்ததாகவும் குறிக்கப்படுகிறது. ஆனுல் இந்த இரண்டு கூறுகளையும் பொருட்படுத்தாமல் அது ஆதி காப்பியம் என்று சமஸ் கிருத வாணரால் கருதப்பட்டது. வால்மீகி ராமாயணங் கூட ஓரளவு' ஏகதேச காவியமாகக் கருதப்படுவ துண்டு. தமிழ் மலையாள இராமாயணங்கள், சிறப்பாக மலையாள இராமாயணம், வால்மீகி இராமாணயத்தைப் பார்க்க மிகுதி காப்பியப்பண்பு உடையவை என்பதில் ஐயமில்லை.

இலக்கிய உலகில் இருவகைக் காப்பியங்கள் உண்டு. இயற்கைக் காப்பியங்கள், செயற்கைக் காப்பியங்கள் என்பன அவை. முந்தியவை மக்களிடையே வழங்கிய மக்கட் பாடல்களை, காப்பிய உணர்வுடைய ஒரு கலைஞன் தொகுப்பதால் ஏற்படுவன. பின்னது ஒரு கலைஞனுலேயே கட்டமைக்கப்படுபவை. ஹோமரின்

இலியட் முந்திய வகைக்கும், மில்ட்டனின் துறக்க நீக்கம் பிந்தியதற்கும் எடுத்துக் காட்டுக்கள். மணி மேகலை இரண்டுக்கும் இடைப்பட்டது. மக்கள் பாடல் களுக்கு அமைந்த பெயரான 'காதையே' அதன் உள்ளு றுப்பின் பெயராக அமைந்துள்ளது.

**உயிர்க்காப்பியங்களின் பண்புக் கூறுகள்**

உயிர்க்காப்பியப் பண்புகள் முற்றிலும் அமைந்த தமிழ்க் காப்பியம் மணிமேகலை ஒன்றே என்னலாம். சிலப்பதிகாரமும் அப்பண்பு நிறைந்ததாயினும், அது காப்பியப் பண்புடைய காப்பிய நாடகம் என்று மேலே கூறினோம். தமிழில் மணிமேகலையும் சமஸ்கிருதத்தில் காளிதாஸன் இருகாவியங்களும், ஹோமரின் இலியடும், தாந்தேயின் மூவுலகும், மில்ட்டனின் துறக்க நீக்கமும் தாம் உலக இலக்கியத்தின் உயர்பெருங் காப்பியங்கள் ஆகும். கம்பராமாயணம் மட்டுமல்ல, சிந்தாமணிகூட இவற்றில் இடம் பெறுவது அரிது.

இந்த உயர்பெருங்காப்பியங்களின் தனிப்பண்புகள் பல. அவற்றுள் பெரும்பாலானவற்றைச் சிலப்பதிகாரத் திலும் காணலாம். இதிகாச புராணங்கள் ஆகிய போலிக் காப்பியங்களிலிருந்து, அவற்றைப் பிரித்துணரவல்ல காப் பியச் சிறப்புப் பண்புகள் பல. அப்பண்புகளில் உலகில் சிறந்த காப்பியங்களையும் விஞ்சிய சிறப்பு மணிமேகலைக்கு உண்டு என்பது ஒப்பீட்டால் விளங்கத் தகும்.

இவற்றில் சில காண்போம்.

சிந்தாமணியிலும் பிற்காலப் புராணங்களிலும் இக் கால புராணத் திரைப்படங்களிலும் கதைக்குரிய இடமும் காலமும் இந்த உலகில் எந்த இடமோ, வரலாறறிந்த எந்தக் காலமோ அல்ல, இரண்டும் கற்பிதமானவை. இராமாயண பாரதத்திலோ பின்னணி இடம் வடநாடு.

ஆனல் வடநாட்டு வாழ்க்கை காட்டப்படவில்லை. பெயர் தவிர மற்ற யாவும் கற்பனை. காலமும் அப்படியே. மேலைவுலகக் காப்பியங்களில்கூட இக்குறை உண்டு. மணிமேகலை இதற்கு முற்றிலும் விலக்கு ஆகும்.

உயிர்க் காப்பியங்கள்—தலைசிறந்த தற்காலப் புனை கதைகளைப்போல—எடுத்த எடுப்பிலேயே கதையின் கவர்ச்சிமிக்க இதயப் பகுதியை எட்டிப் பிடித்துவிட வேண்டும். அதன் வீறமைதியின் உச்சியை எடுத்துக் காட்டி வாசகரை ஈர்த்துவிடவேண்டும்.

*‘ வீரருடன் கடவுளர்கள்*
*கைகலந்த பெரும்போர் ’*

என்று ஹோமரும்

*‘ வடதிசைக்கண் இமயமலை*
*மேல்கடலும் கீழ்கடலும் அளக்கும்*
*முழக்கோல்போல் கிடக்க ’*

என்று காளிதாசனும்

*‘ மனிதன் மாபெரு வீழ்ச்சியும். அதன் பயனுய*
*விளையும் ஆமிவை ’*

என்று மில்ட்டனும் தொடங்குவது போல,

*‘ ஞாயிறு போற்றுதும் ’*

என்று கண்ணகி திருமண வாழ்த்துடனும் திருமணத் துடனும் சிலப்பதிகாரம் தொடங்குகிறது.

*‘ உலகம் திரியா ஓங்குயர் விழுச்சீர்*
*பலர் புகழ் மூதூர் ’*

என்று மணிமேகலை புகார்நகர் வருணனையுடனும் இந்திர விழாவுடனும் தொடங்குகிறது.

சிலம்பு, மேகலை ஆகிய பாடல்களின் பதிகங்கள் கூடக் காப்பியத்தின் இப்பண்புகள் செறிந்துள்ளன. சிலம்பின் பதிகம் மணிமேகலையாசிரியராலும், மேகலையின் பதிகம் சிலப்பதிகார ஆசிரியராலுமே இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதை இவை சுட்டிக் காட்டுகின்றன.

உயிர்க் காப்பியங்கள் நாட்டுப் பெருமை, நகர்ப் பெருமை—ஆற்றுச் சிறப்பு, மலைச் சிறப்பு—மாலை வருணனை, நிலா வருணனை—நீர் விளையாட்டு, பந்து விளையாட்டு—ஆகியவற்றுள் ஒன்றும் பலவும் ஏற்பறிந்து தரவேண்டும். கம்பராமாயணமும் பிற்கால தமிழ்ப் புராணங்களும் இவற்றைக் குறைவின்றித் தருகின்றன—ஆனால் சிலம்பு மேகலைகளைப்போல ஏற்பறிந்து கதையுடன் இரண்டறப் பொருத்தித் தரவில்லை. நாடு, நகர், ஆறு, மலை, வருணனை தொடக்கத்திலும், பிறவருணனைகள் கண்ட கண்ட இடங்களிலும் கதைக்குப் புறம்பாகவும் கதைப் போக்கை இடையிட்டுத் தடுத்தும் தரப்படுகின்றன. ஆனால் இவ்வகையில் சிலம்பு முதல் தரமான வியத்தகு கலைப்பண்பு காட்டியுள்ளது. சிலம்புக்குப் பின்னிடாத நிலையிலே, சில பல கூறுகளில் சிலம்பாசிரியரும் பொருமைப்படும் வகையில், மேகலை இவ்வகையில் சிறப்புப் பெறுகிறது. இரு ஏடுகளிலும் நாடு நகரச் சிறப்பும் காவிரி ஆற்றுச் சிறப்பும் பிற வருணனைகளும் திணைவண்ணங்களும் (*Local colouring*) எங்கும் கதையுடன் கதையாக, கதைப் போக்கைத் தடைப்படுத்தாமல், அடிக்கடி கதை உணர்ச்சிகளைப் பெருக்கிக்கொண்டே இழையோடுவது காணலாம்.

மேலைநாட்டு காப்பியங்களுக்கும் சமஸ்கிருதத்தில் காளிதாஸனுக்கும்கூட இல்லாத ஒரு பெருஞ் சிறப்பு—குணாட்டியன் பெருங்கதைக்கும் சமஸ்கிருத புத்த சமய

இலக்கியத்துக்கும் மணிமேகலை சிலப்பதிகாரத்துக்கும் மட்டுமே பொதுவான ஒரு கூறு உண்டு. அவை இரண்டும் கடவுளரைப் பற்றிய ஏடுகள் அல்ல: மக்களைப் பற்றியவை. மக்களிடையேயும் மன்னரைப் பற்றியவை யல்ல, பொதுமக்கள் சார்ந்தவை. சிலப்பதிகாரம் ஒரு வணிக நங்கையைத் தெய்வமாக்கிக் காட்டுகிறது. மேகலையோ ஒரு கணிகை நங்கையே மக்கட் பண்பில் இன்னும் ஒருபடி முன்னேறிச் சீர்த்திருத்தப் பண்பை அடைந்து விட்டதாகக் காட்டுகிறது. சமஸ்கிருதப் புனைகதையான 'வாசவதத்தைபோல, ஒரு கணிகை நங்கையின் உள்ள உயர்வையும், சமூக சேவையையும் எடுத்துக் காட்டுகிறது. இவ்வகையில் பசிப்பிணி மருத்துவம் போற்றும் முறையிலும், சிறைக்கோட்டம் அறக்கோட்ட மாக்கும் முறையிலும், ஓர் உயிரிடத்து உண்மை அன்பு செய்பவர் "எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும்" (*XXIII*—79) என்னும் வள்ளுவர், தாயுமானவர், வள்ளலார் ஆகியவர்க்குரிய அருளறப்பண்பு முறையிலும் மணிமேகலை 19, 20-ம் நூற்றுண்டுகட்குரிய சிறந்தஇலக்கிய மாகிவிடுகிறது.

## தேசியக் காப்பியம்

'சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் மட்டுமல்ல. முத்தமிழரசுகளையும் பற்றிய மக்கட் காப்பியம். அதாவது தமிழர் தேசியக் காப்பியம்' என்று காட்டியுள்ளனர் புலவர் குருசாமி அவர்கள். அது காப்பிய நாடகமாயினும், தேசியக்காப்பிய நாடகமே என்பதில் ஐயமில்லை. மணிமேகலையும் இப்பண்பில் சிலம்புடன் முற்றிலும் இணைகிறது, புகார். மதுரை, வஞ்சி என்ற மூன்று நகர்களுக்குப் பதிலாக, "இங்கே புகார், வஞ்சி காஞ்சி' என்ற மூன்று நகர்கள் பின்னணி வண்ணங்கள்

ஆகின்றன. மதுரை சுட்டியே காட்டப்படுகிறது. தமிழக வாழ்க்கையையும் வரலாற்றையும் பின்னி இணைப்பதில் அது சிலம்புடன் முற்றிலும் ஒத்திணைந்ததேயாகும். சிலப்பதிகாரம் மணிமேகலைக் காலத்திலும் அதற்கு முன்னும் உள்ள அரசர் வரலாற்றுச் செய்திகள், மரபுகள் இரண்டு ஏடுகளிலும் பலதடவை சுட்டி நினைவூட்டப் படுகின்றன. எடுத்துக்காட்டாக மேகலையில் முதல் காதையிலேயே கண்ணகி—கோவலன் முடிபும், கதைப் போக்கில் தொடித்தோட் செம்பியன் (*I*—4), கரிகாலன் (*IV*. 107—8), மனுச்சோழன் (*XXII*—210) முதலிய வரலாற்றுச் செய்திகளும், மணிமேகலைக் காப்பிய காலத்திலேயே நிகழ்ந்த காரியாற்றுப் போர் வருணனையும் தரப்பட்டுள்ளன.

இவ்வகையில் மணிமேகலை ஒரு வரலாற்றுக் காப்பிய மாகவும் தேசியக் காப்பியமாகவும் இயங்குகிறது.

தமிழக விவரங்களைக் குறிப்பிட்டுத் தேசியப் பின்னணி வண்ணம் தீட்டுவதில், சிலம்பும் மேகலையும் மற்றச் சங்கப் பாடல்களைக்கூட விஞ்சுகின்றன என்னலாம்.

**சிலம்பும் மேகலையும்**

சிலம்பு முத்தமிழ் நாடகமும் மேகலை ஒரு காப்பியமும் ஆனாலும், இரண்டும் ஒரு தொடர் காப்பியமாக உரையாசிரியர்களாலும் தமிழ் மரபாலும் குறிக்கப்பட்டுள்ளன. பிந்தி இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தின் இறுதி நூற்கட்டுரையே

*‘மணிமேகலை மேல்உரைப் பொருள் முற்றிய*
*சிலப்பதிகாரம் முற்றும்’*

என்று முடிவுறுவது இதனை வலியுறுத்துகிறது: எனவே கலிப்பா தாழிசை வண்ணங்களில் தொடங்கி, அகவலில் முடிவதுபோல, முத்தமிழ் மும்மை நாடகமாக இயங்கும் சிலப்பதிகாரம் இயற்றமிழ்க் காப்பியம் கொண்டு முடியும் ஒரே நாடகக் காப்பியமாக ஆசிரியர்களால் கருதப்பட்ட தென்றும், அவ்வகையிலே தனித்தனி இயற்றி இணைக்கப் பட்டதென்றும் கருதலாம்.

இதற்கேற்ப, திட்டமிட்டும் திட்டமிடாமல் இயல் பாகவும் இரு ஏடுகளிலும் பல பொதுப் பண்புகள் நிலவுவது காணலாம். இரண்டிலும் காதைகளே உறுப்புக் களின் பெயர்களாக நிலவுகின்றன. காதைகள் 'என்' எனவே முடிகின்றன. இரு நூல்களும் 30 காதை களுடையவையாகவே இயங்குகின்றன.

இரு நூல்களும் தொடர்ந்த இரண்டு தலை முறைக் கதைகளையும் தொடர்ந்த ஒரே கால முன் பின் தலைமுறை வாழ்க்கைகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. இரு நூல்களின் கதைத் தொடக்கமும் கதைத் தலையூற்றும் புகாராகவும் இந்திர விழாவாகவுமே அமைக்கப்பட் டுள்ளன.

*" எல்லாப் பொருளும் இதன்பால் உள ; இதன்பால்*
*இல்லாத எப்பொருளும் இல்லையால் !"*

என்ற திருக்குறளின் மதிப்புரைக்கு இரு நூல்களுமே தக்க இலக்கியமாகும். இருநூலின் ஆசிரியர்களும் இரு வேறு வகையில் சர்வ கலாவல்லவர்களாகத் தம் அறிவு முழுவதையும் இருநூல்களிலும் கொட்டி வைத்திருக் கின்றனர். இரு ஆசிரியர்களுமே தம் கால அறிவின் உச்சியில் வீற்றிருந்தவர்கள் என்பதிலும், இருவருமே தமிழ் மொழியைத் தமதாகக் கொண்ட தமிழ் முதல்வர்கள் என்பதிலும் ஐயமில்லை.

‘ பொருளுக்கேற்ற சொல்தேடி
எழுதுவர் பிற புலவர்
ஆனால் இவர் சொற்கேற்பப்
பொருள் தொடர்கிறது ’

என்று சமஸ்கிருதப் புலவன் பவபூதியை அவர் நூலின் சிறப்புப்பாயிரம் புகழ்கிறது. சிலம்பு மேகலை ஆசிரியர் வகையில் இது முற்றும் பொருந்துவதாகும். சிலம்பாசிரியர் வகையில், அவர் தமக்கென ஒரு தமிழ்மொழி வகுத்துக்கொண்டாரோ என்று தோன்றும். அவர் தமிழுக்கு அத்தகைய தனிப் பண்பும் தனி ஆற்றலும் உண்டு. அவர் வருணனைத் திறன் வருணனையில் அடங்காது. சங்க இலக்கியத்தில்கூட இந்தத் தமிழைக் காணல் அரிது. ஆனால், மேகலை ஆசிரியர் சாத்தனார் தமிழாட்சியும் வருணனைத் திறமும் இதிற் குறைந்ததல்ல என்பதை ஐந்தாவது மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதையின் இறுதியில் வரும் புகார்ச் செல்வி உருவகமும் (அடிகள் 109—118), மாலையஞ் செல்வி வருகையின் உருவகமும் (அடிகள் 119—141) தெள்ளத் தெளியக் காட்டும், உபவன வருணனையில்

குரவமும், மரவமும், குருந்தும், கொன்றையும்
திலகமும், வகுளமும், செங்கால் வெட்சியும்,
நரந்தமும், நாகமும், பரந்தலர் புன்னையும்,
பிடவமும், தளவமும், முடமுள் தாழையும்.
குடசமும், வெதிரமும், கொழுங்கால் அசோகமும்
செருந்தியும், வேங்கையும், பெருஞ் சண்பகமும்,
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி (*III 160—6*)

என அந்நாளைய தமிழகத்து மலர்களின் ஒரு சிறு பட்டியலே தரப்படுகிறது.

**சமயச் சார்பான மூன்று திறங்கள்**

பொதுவாக, சிலப்பதிகாரத் தமிழுக்கும் மணிமேகலைத் தமிழுக்கும் உள்ள முக்கியமான வேற்றுமை, முதலதில் கலையின் செழுமை மேம்பட்டுள்ளது என்பதும், பின்னதில் அறிவின் செறிவு விஞ்சியுள்ளது என்பதுமே. இது ஆசிரியர்களின் திறமை வேறுபாடு மட்டுமல்ல, அவர்கள் எடுத்துக்கொண்ட கதைப் பொருளின் வேறுபாடும் ஆகும். இளங்கோ துறவி ஆயினும் அவர் சமயத்தை விட வாழ்விலும், கடவுள் பக்தியைவிட மக்கள் அன்பிலுமே மிகுதி ஈடுபட்டவராகக் காணப்படுகிறார். அவர் எடுத்துக்கொண்ட கதைப் பொருளும் அதற்கேற்ப மனிதப் பண்பையே தெய்வப் பண்பாடாகக் காட்டுகிறது. ஆனால் சாத்தனார் வாணிகரானாலும் அழுந்திய சமயப்பற்றுடையவராகக் காணப்படுகிறார். ஆனால் அவர் சமயம் புத்தசமயமானாலும், அவர் தனித் திறமையால் அது அறிவு, நீதி, பக்தி என்ற தமிழர் சமயத்தின் முத்திசைகளையும் ஒருங்கே அளாவியுள்ளது. இக்காரணத்தால், அது சிலப்பதிகாரத்துக்கு இல்லாத, மற்ற சமய இலக்கிய ஏடுகள் எதற்கும்கூட அமையாத பல திறச் சிறப்புக்கள் அமைந்துள்ளன.

நீதிகளை அழகுபட அழகிய கவிதை மொழியில் கூறும் ஆற்றல் சிறிய ஆற்றலன்று. மேலை உலக இலக்கியத்தில் இலத்தீனக் கவிஞர் ஒருவர் இருவருக்கே அது வாய்த்துள்ளது என்பர். கீழ்த்திசையில் பாரசீகக் கவிஞன் ஹபீஸ் இத்துறையில் பெருஞ் சிறப்புடைய கவிஞனாகப் போற்றப்படுகிறான். தமிழிலோ வள்ளுவர் இதை மிகத் திறம்பட ஆற்றியதுடன் கம்பர் காலம் வரை அதன் மரபையே வளப் படுத்தியுள்ளார். உலகில் எந்த மொழியையும்விடப் பேரளவான, சிறந்த நீதிநூல்களை

உடையது தமிழ். ஆனால் காப்பியமாகிய மேகலை, நீதி நூல்களில்கூடக் காண்டற்கரிய உயர் அறிவுரைகளையும் சமயக் கருத்துக்களையும் வள்ளுவர் மொழியோ என்னும் படி திட்பமும் இனிமையும் அதே சமயம் எளிமையும் வாய்ந்த நடையில் தந்துள்ளது.

"*கோல்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்* (*VII—8*)
"*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*"
(*XI—16*)
"*எவ்வுயிர்க்காயினும் இரங்குதல் வேண்டும்*"
(X*XII—879*)

என்ற அடிகள் தமிழகத்திலே பழமொழிகளாய், தமிழர் பேசும் மொழியுடன் மொழியாய்க் கலந்தவை ஆகும்.

'வாழ்வு மாயம், துன்பமயமானது' என்று கீழ் திசையில் பாடிய புலவர் பலர். இக்கருத்தில் புதுமையோ, கவர்ச்சியோ கிடையாது. ஆனால் மணிமேகலை அதைக் கூறும் அடிகளில் எவ்வளவு எளிமை, எவ்வளவு உண்மையான உணர்ச்சி ததும்புகிறது என்பதை வாசிப் பவர் காணாதிருக்க முடியாது.

"*பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்,*
*பிறவார் உறுவது பெரும் பேரின்பம்!*
*பற்றின் வருவது முன்னது, பின்னது*
*அற்றோர் உறுவது*"

ஒரு அடியில் உண்மையான சோகத்தின் அடித் தலத்தை எட்டுகிறோம். ஆனால் அடுத்த அடியிலேயே கவிஞர் உச்ச உயர் கிளர்ச்சியூட்டி விடுகிறார். அடுத்த இரண்டடி இவற்றின் விளைவான நீதியை வலியுறுத்து கிறது.

நீதியை உரைக்கும் கவிஞர்கள் வாழ்க்கையில் அனுபவப்பட் டிருப்பார்கள். ஆனால் ஆழ்கலையறிவு,

சிக்கலான அறிவாராய்ச்சி அவர்களிடம் இருக்க மாட்டாது. இருப்பினும் ஒரு காவியத்தில் அவற்றை விளக்குமளவு எளிமைப்படுத்தும் திறன் பெறுவது அரிதினும் அரிது. புனேகதை எழுதுபவர் அதன் ஒரு அத்தியாயத்தில் ஒரு அறிவுநூல் துறையை விளக்குவதானல், அது எவ்வளவு கைகூடாச் செயல் என்று கூற வேண்டுவதில்லை. ஆனல் இதனையே சாத்தனர் திறம்பட ஆற்றியிருக்கிருர். நூல் முழுவதும் புத்த சமய தத்துவங்கள் விளக்கப்படுகின்றன. ஆனல் 27-வது சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் கீழ்திசை யுலகில் அந்நாள் நிலவிய எல்லாச் சமயக் கிளைகளின் கோட்பாடுகளும், 29-வது தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில் புத்த சமய தத்துவங்களுமே விளக்கப்படுகின்றன. சமயத்துறையாளர் எவரும் செய்தற்கரிய, இலக்கியத்துறையாளர் எவரும் கண்டு பொருமைப்படக் கூடிய செயல் இது என்பது ஊன்றி நோக்கினல் விளங்கும்.

இத்துறையில் சாத்தனருடன் ஓரளவு ஒத்த திறமையுடையவர் இளங்கோவே. ஆனல் இளங்கோ காவியத்தில் புகுத்திய துறையறிவு, கலைத்துறை அறிவு, வரலாற்றறிவு ! சாத்தனர் புகுத்திய துறையோ சித்தாந்த வேதாந்த அறிவாராய்ச்சித் துறை ! எந்தக் கவிஞரும் இது செய்யத் திணறியிருப்பர் என்று உறுதியாகக் கூறலாம். அதற்கு இணை உலக இலக்கியத்திலேயே இல்லை.

மணிமேகலைக் காப்பியந்தரும் சமய உணர்வில் மிக வளமான துறை பக்தித்துறையேயாகும், நீதித்துறையைப் போலவே இத்துறையிலும் தமிழ்மொழி இலக்கிய உலகின் உயர்கொடுமுடியை எட்டியுள்ளது. அத்துடன் பக்தித் துறைஒன்றில்தான் மணிமேகலை முதல் வள்ளுவர், பாரதி

வரை தமிழில் இடையருத ஒழுக்கும் வளர்ச்சியும் காணப் படுகிறது. இத்துறையிலேயே சைவர் வேதங்களாகிய தேவார திருவாசகங்களும், வைணவர் வேதமாகிய திருநாலாயிரமும் உட்பட்டவை. ஆனல் இத்துறையின் நீண்ட பேரிலக்கியத்துக்கு மணிமேகலேயே முதல் கல்லும் மூலத் தலேக்கல்லும் ஆகும். அதில் இடம்கொள்ளும் புத்த பக்திப் பாசுரங்கள் சிந்தாமணியின் அருகன் துதிப் பாடல்களுக்கும், சைவரின் திருவாசக தேவாரங்களுக்கும், வைணவரின் திருவாய் மொழிக்கும், சீராப்புராணத்தின் நபிநாயக வணக்கச் செய்யுட்களுக்கும், வீர மாமுனிவர், கிருஷ்ணபிள்ளை ஆகியவர்களின் இயேசு துதிகளுக்கும் தலேயூற்று என்று கருதும்போது மணிமேகலே தமிழர் அனைவருக்கும் உரிய பழம்பெரும் பக்தி நூலாகவும் இடம் பெறுகிறது.

புத்தர் விழாவில் தமிழர் புத்தரை வணங்குவதற்குப் பாளி மொழி மந்திரங்களைவிட உருக்கமானவை மணி மேகலே தரும் தமிழ் மந்திரங்கள்.

*" மாரனை வெல்லும் வீ , நின்னடி !*
*தீநெறிக் கடும்பகை கடந்தோய், நின்னடி !*
*துறக்கம் வேண்டாத் தொல்லோய், நின்னடி !*
*எண்பிறக் கொழிய இறந்தோய், நின்னடி !*
*கண் பிறர்க்களிக்கும் கண்ணேய், நின்னடி !*
*தீமொழிக்கடைத்த செவியோய், நின்னடி !*
*வாய்மொழி சிறந்த நாவோய், நின்னடி !*
*நரகர் துயர் கெட நடப்போய், நின்னடி !*
*உரகர் துயரம் ஒழிப்போய், நின்னடி !*
*வணங்குதலல்லது வாழ்த்தல் என்நாவிற்கு*
*அடங்காது "* (XI 61--72)

இதன் ஓசையில் திருவாசகத்தின் பொற்றித் திருவகவலின் ஓசையைக் கேட்கலாம். இதன் ஒழுகிசையைப் பட்டினத்தார் பாடலில் காணலாம். ஆனால் 'துறக்கம் வேண்டாத் தொல்லோய், நரகர் துயர்கெட நடப்போய்' ஆகிய அடிகளே தமிழர் சைவம், தமிழர் வைணவம் ஆகியவற்றையும் பாரதியார் பக்தியையும் பிற பொதுச் சமயவாணர் சமயத்திலிருந்து தனிப்படுத்த உதவின என்னலாம். திருவள்ளுவரைப் பின்பற்றிச் சாத்தனார் இதனைத் தமிழ்ப் புத்தநெறியாகக் கொண்டிருக்கவேண்டும்.

*"வேண்டுதல் வேண்டாமை இலான்*
*மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று"*

என்பது போன்ற முப்பாலுரைகளால் ஊக்கப்பட்ட இவ்வடிகள் நாயன்மார்களிடையே 'உன்நாமம் கூறும் உரிமை பெறின் நரகமும் செல்லத்தயங்கேன்' என்ற கருத்தையும், ஆழ்வார்களிடையே 'உன் பெயர் கூற முடியாதாயின், இந்திரலோகமும் வேண்டேன்' என்ற பண்பையும் பாரதியாரிடம் 'பகைவனுக்கருள்வாய்' என்ற கோரிக்கையையும் தூண்டின என்பதில் ஐயமில்லை.

திருக்குறளைச் சங்க நூல்களும் சிலப்பதிகாரமும் பிற்கால நூல்கள் யாவும் புகழ்ந்துள்ளன. எடுத்தாண்டுள்ளன. ஆனால் ஒரு குறளை எடுத்தாண்டு ஆசிரியரைப் 'பொய்யில் புலவன்' என்று தமிழிலக்கியத்தில் முதன் முதல் அழைத்தவர் சாத்தனாரே.

*"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்*
*பெய்எனப் பெய்யும் பெருமழை' என்ற இப்*
*பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"*

திருவள்ளுவருக்கே உரிய தனிச் சிறப்பு வாய்ந்த கருத்துக்கள் பலவற்றின் ஒளிக் கோடுகளை மணிமேகலையில் காணலாம்.

*'புத்தேள் உலகம் புதல்வரும் தாரார் !* (XXII–127)

*"ஆற்றுமாக்கள் அரும்பசி களைவோர்*
*மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை !"*

கீழ்த்திசையிலும் சரி, மேல்திசையிலும் சரி, காப்பியங்களில் மற்றெல்லாச் சிறப்பும் இருப்பதுண்டு. பண்போவியச் சிறப்புத் தற்காலப் புனை கதைகளிலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களிலும் காணும் அளவு காப்பியங்களில் அமைவதில்லை. அமைந்தாலும் பண்புகள் இயங்கு பண்புகளாய், இயல்பாகக் கதையுடன் வளரும் பண்புகளாய் இருப்பதில்லை. சிலப்பதிகார நாடகம்கூட இந்த ஒரு வகையில் குறைவுடையதேயாகும். கோவலன் வாழ்க்கைப் போக்குக்கும் முடிவுக்கும் அவன் தலைசிறந்த பண்புகளுக்கும் தொடர்பு காண முடியாது. ஆசிரியரே 'ஊழ்' வலிகாட்டி அத் தொடர்பின்மையை ஒத்துக் கொள்வதுபோலத் தோற்றுகிறது. கண்ணகியோ வீரத்தின் தடமேயில்லாத பெண்ணுயிருந்து திடுமெனத் தெய்வ ஆற்றலுடைய வீர நங்கையாய் விடுகிருள். ஆனல் மணிமேகலை இவ்வகையில் தற்காலப் புனைகதைகளுக்குரிய பண்போவியச் சிறப்புடன் இயங்குகிறது

மணிமேகலை இளம் பெண். அவள் மெல்லியல்பையோ, காதற் கனிவையோ மதவெறி கொண்ட எந்த ஆசிரியரும் முற்றிலும் காட்டாதிருந்திருக்க முடியும். காட்டினலும் மெல்லியல் பண்பை அழித்திருப்பர். ஆனல் சாத்தனர் மணிமேகலையின் காதலில் அவள் துறவின் உயர்வும், அதேசமயம் அவள் துறவில் அக் காதலின் உள்ளார்ந்த கனிவும் வெளிப்பட வைத்துள்ளார்.

அவள் அழகும் மெல்லியல்பும் பலர் வாயுரையால் சுட்டப்படுகின்றன. காதல் இன்னதென்றே அறியாப்

பருவத்தே, உதய குமரனைக் கண்டபோது அவளுக்குண்டான உணர்ச்சிகளை அவள் கன்னித் தன்மையின் தூய்மையுடனும் அறியாமையுடனும் தானே வெளியிடுகின்றாள்.

> " இகழ்ந்தனன் ஆகி நயந்தோன் ' என்னாது
> புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம் !
> இதுவோ, அன்னாய் ! காமத்து இயற்கை ?"
> (*V 87—90*)

என்று அவள் சுதமதியை நோக்கிக் கேட்கின்றாள். இதில் அவள் காதலுள்ளம், கன்னிமை, வாய்மை, பெண்மை மெல்லியல்பு ஆகிய யாவும் விளங்குகின்றன. சுதமதியைக் காணாதபோது,

> *சுதமதி, ஒளித்தாய் ! துயரம் செய்தனை*
> *கனவோ னவோ என்பதை அறியேன் !......*
> *ஒரு தனி அஞ்சுவென், திருவே !* (*VIII 20-1, 27*)

என அவள் புலம்புவது அவள் மெல்லியல்புக்கும் அறியா இளமைக்கும் உரிய அச்சத்தைக் காட்டுகிறது. ஆனால் இதே மெல்லியல்பும் காதல் கனிவும் அவற்றை வெல்லும் அவள் துறவுத் தியாகத்தின் உயர்வை எடுத்துக் காட்டுகின்றனர். அந்தத் தியாகம் அக்காதலில் கூடக் காணப்படுகிறது. இகழ்ந்தவள் என்று தெரிந்தும் அது உதய குமாரனோடச் செய்கிறது. தவிர, அக்காதல் துறவினிடையேயும் தன்னையறியாத அன்புக் கனிவாய் உள்ளொளி பூக்கின்றது. அவன் சிற்றின்ப அவாவை நீக்கி, உயர் புத்தநெறி யறிவூட்டி, ஆழ்ந்த அருள் நெறியிலேயே உணர்ச்சியை உயர்நேசமாக்க அவள் முயல்கிறாள்.

இலக்கிய உலகில் மணிமேகலையுடன் ஒப்பிடத் தக்க உயர்ந்த இளமைப்பெண்மையைக் கிரேக்க நாடகப்

புலவன் ஸோபேக்ளிஸின் அந்திகோணேயிடம் காண லாம். அந்திகோணே தந்தை யன்புக்காக உலக வாழ்வும் இன்பமும் துறக்கிறுள். சமுதாய நீதி எல்லே கடந்து அன்புத்தியாகம் செய்கிறுள். மணிமேகலேயோ காதலேயும் மனிதவாழ்க்கையையும் சமுதாயம் காட்டும் ஓர் உயர் இலக்குக்காகத் துறக்கிருள். ஆயினும் அத்துறப்பிலேயே அவள் பெண்மையின் மாசற்ற தூய அன்புள்ளமும் காதல்துடிப்பும் பளிங்குச் சிலேயில் காணப் படும் உள்வரை வண்ணம்போல நமக்குக் காட்சி யளிக்கின்றன.

சுதமதி, சித்திராபதி முதலிய பெண்மைச் சித்திரங் களும் இதுபோலவே உயிர்ச்சித்திரங்கள். சிற்றின்பக் காதலுணர்வில் படபடத்து அலேயும் உதயகுமாரன், மகள் பாசத்தைவிடச் சோழ மரபின் பெருமையில் உளங் கொண்ட சோழன் மாவண் கிள்ளி, பிள்ளேப் பாசத்தால் தூண்டப்பட்டுக் கொடுமை செய்ய முனேயும் சோழமா தேவி, வீறுமிக்க துறவுவாழ்விலும் அன்புள்ளமும் பரிவும் கொண்ட அறவணவடிகள், ஆத்திரமும் முன்கோபமும் கொண்ட காஞ்சனன்—இவையே இன்றும் ஒரு சமூகப் புனேக்கதைக்குப் போதிய பண்போவியங்கள் ஆகும். இரக்கமே உருவாய், புத்தர் அருளறத்தின் உருவான ஆபுத்திரன் உள்ளப் பண்பு கண்டால், அந்த உள்ளம் தெய்வத்தன்மையுடைய உண் கலத்தினும் குறைந்த அற்புதமன்று.

ஆதிரை, மருதி, விசாகை முதலிய பத்தினிப் பெண்டிர் கதை சிலம்பின் ஏழு நங்கையர் கதைகளுடன் ஒப்புடையன.

சிலப்பதிகாரத்தை நோக்க, மணி மேகலேயின் மொழியும் நடையும் கதையும் சோடனேத்திறமும் கலே

மெருகும் கவர்ச்சி குறைந்தவை என்பதில் ஐயமில்லை. இக்காரணத்தால் தமிழர் சிலப்பதிகாரத்தில் கருத்துச் செலுத்திய அளவு மணிமேகலையில் செலுத்தவில்லை என்பது உண்மையே. கதிரவன் அருகே எழும் நிலா ஒளி கதிரவனொளியால் பொலிவு குன்றுவதுபோல, மணிமேகலையும் குன்றவே நேர்கிறது. ஆனால் இது சிலம்பின் சிறப்பாகலாம். மணிமேகலையின் குறைபாடு ஆகமாட்டாது. ஏனெனில் மணிமேகலை சிலம்பின் தனிச் சிறப்பான பண்புகளிலும் அதனோடு ஒப்பானது. அத்துடன் வேறு தனி உயர் பண்புகளும் உடையது. நாம் சிலம்பளவு மேகலையில் கவர்ச்சி காணாததற்கும், சிலம்பளவு அதன் சிறப்புக்களை உணராததற்கும் உள்ள காரணம் இன்றைய தமிழர் அறிய வேண்டியஒன்று—இரண்டிலும் சொற் சிறப்பும் பொருட் சிறப்பும் விஞ்சியன ஆயினும், சிலம்பில் பொருளை விஞ்சிய சிறப்பு அதன் கன்னல் மொழியில் இடம்பெற்றுள்ளது. ஆனால் மேகலையில் சொல்லை விஞ்சிய சிறப்புடன் பொருள் மிளிர்கின்றது. சிலம்பு கேட்டவுடன் இன்பம்தருவது ; மேகலை ஆழ்ந்து கற்கக் கற்க இன்பம் பயப்பது. சிலம்பு நாடகமாதலால், திசைமொழி அதாவது பேச்சு மொழிப்பண்பு நிரம்பியது. மணிமேகலை அறிவுக் காப்பியமாதலால், மேலீடாக எளிய ஆனால் ஆழ்ந்த பொருள் செறிந்த சொல் நடை உடையது.

சிலம்பு கதலியின் எளியபாகமும், மேகலையும் திருக்குறளும் பலாவின் அரும்பாகமும், சங்க இலக்கியம் பொதுவாக வாதுமைப் பருப்பின் கடும் பாகமும் உடையன என்னலாம்.

புத்துப் பாட்டு

# நன்னன் மலையில் நாளும் திருநாள்!

நா. பாண்டுரங்கன், M.A.

விழா மாந்தர்தம் கவலைக்கு விடுதலையல்ல, விடு முறையே வழங்குகிறது; என்றாலும் விழா விளக்கும் கோலம் எழில் மிக்கது. மக்கள் அகமும் முகமும் மலர் கின்றனர்; வீடும் தெருவும் புதுப்பொலிவுகூடி விளங்கு கின்றன; ஊர் ஆரவாரத்தில் ஆழ்ந்திருக்கிறது. உவகை மிகுதியால் ஊர் தன் குரலெடுத்துப் பாடும்பாட்டே அந்த ஆரவாரம்! விழா திங்களுக்கொன்று, ஆண்டுக் கொன்று என்று என்றோ வருகிறது. அதனால்தான் விழாவென்று மக்களிடையே அத்துணை மகிழ்ச்சி, ஆர்வம், அரவம் என்பர். ஆனால் இக்கருத்தினை இரணியமுட் டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்ற புலவர் ஏற்றுக்கொள்ளார்; என்றோ வருவதால்தான் விழா நன்று என்ற கருத்தினை அப்புலவர் ஒப்புக்கொள்ள மறுப்பார். நாளும் விழா என்றால் விழாவின் சுவை குன்றிவிடும் என்று ஏன் கொள்ளவேண்டும்? நாளும்

விழாவரினும் நன்றே என்பதை உணர்ந்த நற்றமிழ்ப் புலவர் அவர் !

பல் குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் கன்னன் நாட்டில் நாளும் விழாவைக் காண்கிறார் பெருங் கௌசிகனார். விழா என்றால் புலவர் விழாவோ வீரர் விழாவோ அல்ல. வாழ்வே விழாவாக் இருக்கக்—காண்கிறார் புலவர். நன்னன் மலை திருநாளை யொத்துச் சிறந்து தோன்றும் என்று கூத்தன் கூற்றாக கலைநயம் மிளிரும் **மலைபடு கடாத்தில்** பெருங் கௌசிகனார் கூறுகிறார்.

நன்னனுடைய மலையில் எண்ணற்ற ஓசைகள் எழுந்துகொண்டிருக்கின்றன ; எல்லா ஓசைகளும் ஒன்று சேர்ந்து இடைவிடா ஆரவாரத்தை உண்டாக்குகின்றன ; நாளும் அந்த ஆரவாரம் நன்னன் மலையில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

மலைமேல் ஒரு பரண் அமைந்திருக்கிறது. அந்தப் பரண்மேல் வேடர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் ஒரு முயற்சியில் முனைந்துள்ளனர். தினைப்புனத்தில் நாளும் புகுந்து கதிர்களையெல்லாம் தின்றும், நடந்து அழித்தும் நாசம் செய்யும் ஒரு யானையைப் பிடிக்கும் முயற்சியில் முனைந்துள்ளனர். அந்த யானை யானைகளுக்கெல்லாம் தலைமை தாங்கும் யானைத்தலைவன் ! ஆதலால்தான் வேடர்கள் அந்த யானைத் தலைவனைப் பிடிக்கப் பேரார வாரம் செய்கின்றனர். அந்த ஆரவாரம் நெடுந்தொலைவு கேட்கிறது !

இன்னொரு பக்கத்தில் நிகழும் செயல் இது. நீண்ட குகையிலிருந்து முள்ளம்பன்றி ஒன்று கடுஞ்சினத்துடன் பாய்கிறது. வேடுவர்கள் முள்ளம் பன்றியின் கூர்மை யான முள்ளால் தாக்கப்பெற்றுக் கீழே விழுகின்றனர்

கூக்குரலிட்டு அழுகின்றனர். அவர்கள் அழும் அவல ஒலி கேட்கிறது !

வேறொரு திக்கில் குறத்தியர் சிலர் பாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அருகே அவர்களின் கணவன்மார் படுக்கையில் உள்ளனர். புலிபாய்ந்ததால் அம்மறவர்களின் உடலிலே உண்டான புண்ணை ஆற்றுவதற்கே அவர்கள் பாடுகின்றனர். உடல் துன்பத்தை இசை இன்பத்தில் மறக்கச்செய்யவே குறத்தியர் பண்களைத் தேர்ந்தெடுத்துப் பாடுகின்றனர். அந்தப் பாட்டின் ஒலி காற்றில் மிதந்து வருகிறது !

மற்றொரு திசையில் பூத்துக் குலுங்கும் வேங்கை மரத்தைச் சுற்றிப் பூவையர் சிலர் நிற்கின்றனர், 'புலிபுலி!' என்று கூவுகின்றனர் ; குதிக்கின்றனர் ; மரத்தின் கிளையை வளைத்துப் பூக்களைப் பறிக்கின்றனர் ! புலி புலி என்று அந்தப் புள்ளிமான்கள் கூவும் ஒலியைக் காற்று அள்ளிச் செல்லுகிறது !

பிறிதொரு மருங்கில் கருவுற்ற பெண்யானைக்கு ஆண்யானை அது வேண்டிய உணவைக் கனிவுடன் தந்துவிட்டுக் களிப்புடன் செல்லுகிறது. அந்த ஆண் யானையின் வரவுக்காகக் காத்து அதன் வழியில் ஒளிந்திருந்த புலி ஒன்று அதன்மேல் பாய்கிறது. அப்போது அப்புலியின் நரித் தாக்குதலால் நடுங்கித் தன் சுற்றத்தை அந்தக் களிறு இடிக்குரலால் அழைக்கிறது ; அந்த இடியோசைக்குக் குன்றெல்லாம் குரல் கொடுக்கிறது !

வேறொரு பகுதியில் மரத்தில் உயரப்பாய்ந்த ஒரு பெண் குரங்கு தன் வயிற்றிலிருந்த குட்டியைத் தன் ஒரு கையால் தழுவிக்கொள்ளத் தவறிவிட்டது ; அந்தக் குட்டியும் தன் கைகளால் தாயை இறுகப்பற்றிக் கொள்ளாது இருந்துவிட்டது. அதனால் அக்குட்டி கீழே

வாய்பிளந்திருந்த ஆழமான வெடிப்பில் வீழ்ந்து இறந்து விட்டது. அது கண்டு அந்தத் தாய்க்குரங்கு தன் சுற்றத்தைக் கூட்டிக்கொண்டு கூக்குரலிடுகிறது; சுற்றமும் கீச்சிடுகிறது. அதனால் எழுந்த ஆரவாரம் எங்கும் நிறைகிறது.

கண்ணேணி வழியாகச் சென்று உச்சியில் தொங்கும் கூடுகளை அழித்துத் தேன் கொள்ளுகின்றனர் சிலர். அதனால் உண்டாகும் ஆரவாரம் அங்கே அடங்காது நிற்கிறது!

பகைவர் தங்கும் சிற்றரண்கள் கானவர்களின் கண்களில் படுகின்றன. அவ்வளவுதான்! பாய்ந்து சென்று அச்சிற்றரண்களைப் பாழ்செய்கின்றனர். அந்த மகிழ்ச்சியால் அவர்கள் வெற்றி முழக்கம் செய்கின்றனர். அந்த முழக்கம் விளக்கமாகக் கேட்கிறது!

வேடர் குடித்து மகிழ்ந்து சிறுபறை கொட்டித் தம் குறத்தியருடன் குரவையாடி மகிழ்கின்றனர். குன்றின் உச்சியில் நடக்கும் குரவை ஒலி எங்கும் தங்குகிறது!

கல்லின்மேல் பாடிக்கொண்டே ஓடிவரும் ஆறுகள் பெரிய வெடிப்புக்களில் பாய்கின்றன. அதனால் உண்டாகும் ஒலி, அழகிய தேர்கள் ஓடிவந்தால் உண்டாகும் ஒலிபோல் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கிறது!

காட்டாற்றின் சுழியில் அகப்பட்டுக்கொண்ட யானை சினங்கொண்டு பிளிறுகிறது. பாகர்கள் யானையின் சினம் தணியக் கனிமொழி பேசுகின்றனர் யானை மொழியால்! அதைக் கம்பத்திலே கட்டுவதற்கு எழும்பும்படிக் கட்டளையிடுகின்றனர். இதனால் உண்டாகும் அரவம் தெளிவாக ஒலித்துக் கொண்டிருக்கிறது!

கதிர்களில் அலகை வைக்கும்கிளிகளைப்பரண்மீதுள்ள பெண்கள் விரட்டுகின்றனர். பிளந்த மூங்கிலால் தட்டிக் கிளிவிரட்டும் அந்தக்கிளிகள் கிளப்பும் ஆரவாரம் பெருந் தொலைவு கேட்கிறது !

காளையும் மரையானேறும் புண்தோன்றும் நிலையில் முட்டிமோதிப் போரிட்டு முழக்கம் செய்கின்றன !

இன்னொரு பக்கத்தில் எருமைக்கடாக்கள் போரிட்டு ஆரவாரம் செய்கின்றன !

வேறொரு பக்கத்தில் எல்லோரும் உண்டு கீழே மிஞ்சிக்கிடக்கின்றன பலாச் சுளைகள். அந்தச் சுளைகளி லிருந்து விதைகளை எடுக்கச் சிறுவர்கள் யானைக் கன்று களை ஒன்றாகப் பிணைத்து அவைகளின் மீது கடாவிடுகின் றனர் ; காந்தள் மடலாலே அடித்து யானைக் கன்றுகளைக் கடா விடுகின்றனர் ? அதனால் எழும் ஆரவாரம் எங்கும் நிறைகிறது.

மற்றோர் இடத்தில் ஆலைகளில் கரும்பிலிருந்து சாறு கொள்ளுகின்றனர். அந்த ஒலி நன்கு கேட்கிறது !

பிறிதோர் மருங்கில் உலக்கைப் பாட்டைப் பாடிக் கொண்டே தினையைக் குத்துகின்றனர் மகளிர்; தினையைக் குத்திக்கொண்டே பாடிக்கொண்டிருக்கின்றனர் மகளிர் ! இந்த ஆரவாரமும் அங்கே கேட்கிறது. அந்த ஆரவாரத் தோடு சேம்பையும் மஞ்சளையும் பன்றிகள் தோண்டி விடாதபடி காப்பவர்கள் கொட்டும் பன்றிப் பறையின் ஓசையும் கேட்கிறது.

இந்த எல்லா ஓசைகளும் கேட்கின்றன. நன்ன னுடைய மலைநாட்டில் நாள்தோறும் இந்த ஓசைகளைக் கேட்கலாம். இந்த ஓசைகளால் உண்டாகும் மலையின் எதிரொலியும் கேட்கலாம் !

முழவு கண்ணுறக்கம் அறியாத அகன்ற ஊரில் நடக்கும் விழாவில் அடங்கியிருக்கும் ஆரவாரமும், நன்னனுடைய மலையில் கேட்கும் இந்த ஆரவாரமும் ஒன்றே! அதனால் தான்.

*" குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர்*
*முழவுத்துயி லறியா வியலு ளாங்கண்*
**விழவி னற்றவன் வியன்கண் வெற்பே "**

என்கிறார் புலவர்.

விழாவில் ஆரவாரம் உண்டு. ஆனால் ஆரவாரம் மட்டுமே விழாவாகுமோ? ஆகாது! மலையில் எழும் ஓசைகள் உருவாக்கும் இடைவிடாத ஆரவாரம் ஒன்றை மட்டுமே எண்ணித்தான் நன்னனுடைய மலை திருநாளை ஒத்துச் சிறந்திருக்கும் என்று புலவர் கூறுகிறாரோ? தொடர்ந்து அவர் கூறும் மொழிகளை எண்ணும்போது, ஆரவாரம் மட்டுமே குறித்து அவர் கூறுகிறார் என்று எண்ணுவதற்கு முடியவில்லை.

விழா என்பது ஆரவாரம் ஒன்று மட்டுமே கொண்டதல்ல, மாந்தர் தம் புலனுக்கும் அறிவுக்கும் நல்விருந்து நல்கும் போதுதான் விழா விழாவாகிறது. புலவர் கூறும் மொழிகள் இக்கருத்தையும் புலப்படுத்துகின்றன.

*" கண்ண டண்ணெனக் கண்டுங் கேட்டு*
*முண்டற் கினிய பலபா ராட்டியு*
*மின்னும் வருவ தாக நமக் கெனத்*
*தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்*
*செருமிக்குப் புகலுந் திருவார் மார்ப*
*னுருமுரறு கருவிய பெருமலை பிற்பட*
*விறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்*
*நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்*
*கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின் "*

என்று கூத்தன் கூறும் அன்புரையில் புலவர் நன்னன் மலை திருநாளை ஒத்துச் சிறந்து தோன்றும் என்று ஏன் கருதுகிருர் என்பதற்குக் காரணம் புலப்படக் காணலாம். கூத்தன் கூத்தனைப் பார்த்துக் கூறுகிருன். “காண் பதற்கு இனிய வற்றைக் கண்குளிரக் காணுங்கள்; கேட்பதற்கு இனியவற்றைச் செவி குளிரக் கேளுங்கள் ; உண்பதற்கு இனிய உணவுகளைப் பாராட்டி உண் ணுங்கள்” என்று அன்புடன் கூறுகிருன் கூத்தன். நன்னன் மலையில் இவ்வளவும் போகும் வழியிலேயே பெற இயலும் என்பது உண்மை. அதனால்தான் கூத்தன் இவ்வாறு கூறுகிருன்.

காண்பதற்கு இனியவற்றைக் கண் குளிரக் காணுங்கள் என்கிருன் கூத்தன். நன்னனுடைய மலை நாட்டிலும் காட்டு நாட்டிலும் தண் பணை நாட்டிலும் எங்கும் காண்பதற்கு இனிய காட்சிகள் நிறைந்துள்ளன. நன்னனுடைய நகரத்துக்குச் செல்லுகின்ற வழியே புது வருவாய்களை யுடைய ஊர்கள் நெருங்கப்பெற்று எங்கும் காணுதற் கரிய புதிய காட்சிகளை யுடையது. அங்கே மக்கள் விரும்பியபடியே பயிர்கள் விளைந்து மண்டிக் கிடக்கும் காட்சி அழகு மண்டியது. கொல்லைகளில் முசுட்டைக் கொடிகள் வளர்ந்து பூக்களைப் பெற் றுள்ளன. அந்தப் பூக்கள் கார்த்திகை நட்சத்திரம்போல் உள்ளன. எள்ளுப் பயிர்கள் ஒரு கைப்பிடியில் ஏழு காய்கள் அடங்கும்படி நெய்யொழுகக் காய்த்து வளர்ந் துள்ளன. அறுவடைப் பருவத்தில் இருக்கும் தினைப் பயிர் விளையாட்டுச் சண்டை செய்கின்ற யானைக் கன்று களின் துதிக்கை ஒன்ருெடொன்று பிணைந்தாற்போல் தினைக்கதிர்களைப் பெற்றுள்ளன. தினையை அறுத்த கொல்லைகளில் அரிதாள் தோறும் அவரைகள் வளர்ந் துள்ளன ; அவை கீழே சிந்தியுள்ள பூக்கள் தயிர்க் கட்டி

களைப் போல் உள்ளன; அவைகொண்டுள்ள அவரைக் காய்கள் அரிவாள் போல் விளங்குகின்றன. வளர்ந்து நிற்கும் வரகம் பயிர்கள் தருக்கும் பேசுவோருடைய இணைந்து தோன்றும் கைவிரல்களைப் போல் இரட்டித்த கதிர்களைப் பெற்று இலங்குகின்றன. ஐவன நெல்லும் வெண்ணெல்லும் நன்ருக விளைந்து நிறைந்துள்ளன. கரும்புகள் மிக வளர்ந்து காற்ருலே ஒரு பக்கமாகச் சாய்ந்துள்ளன; அந்நிலை வேற் படைகளையுடைய சேனைகள் ஓடுவதைப்போல் உள்ளது. வெண் சிறு கடுகுகள் நெருங்கி விளைந்துள்ளன. கரு நெய்தல்கள் மலர்ந்து விளங்குகின்றன. இஞ்சிக் கொல்லைகள் இனிதே நெருங்கியுள்ளன. கவலைக் கிழங்குகள் குழிகள் தோறும் பெண் யானையின் மடித்த முழந்தாளைப்போலச் சிறந்து விளங்குகின்றன. மலையின் மேலே தம்முடைய பூக்கள் படும்படி நிற்கும் வாழைகளின் காய்க்குலைகள் பழுத்து விளங்குகின்றன; அந்நிலை யானையை வேல் குத்தியது போல் இருக்கிறது. நாவலின் பழங்கள் காலமன்றியும் விளைதலால் காற்ருலே உதிர்ந்து பாறைகளிலே பரந்து கிடக்கின்றன. கூவைக் கிழங்குகள்—தேமாம்பழங்கள்—உயவைக் கொடிகள் நிறைந்துள்ளன. ஈரப் பலாக்களின் பழங்கள் தாமே வெடித்து உள்ளேயுள்ள விதைகளைச் சிந்தியுள்ளன. பலா மரங்கள் கூத்தர்களுடைய மத்தளங்கள் போலவே கீழும் மேலும் காய்த்துத் தோன்றுகின்றன. நன்னனுடைய நகரத்துக்குச் செல்லும் வழியில் உள்ளத்தை அள்ளும் இனிய காட்சிகளை இவை அளிக்கின்றன. காண்பதற்கு இனிய காட்சிகள் மேலும் உள்ளன.

காட்டில் மோகன மயில்கள் தோகை விரித்தாடிக் களைத்து நிற்கும். நீண்ட வாலுள்ள ஆண் குரங்குகள் உயர்ந்த மூங்கிற் கிளைகளிலே தாண்டிப் பாயும். மலை

யிலே தோன்றும் தேனடைகள் நாவிலே நீர் ஊறச் செய்யும். அழகிய இந்தக் காட்சியைக் காணமலே செல்ல வேண்டுமாம். இந்தக் காட்சியிலேயே பார்வையை இழைய விட்டுவிட்டால் செல்லுவோருக்கு வழி தவறி விடுமாம் !

நன்னனுடைய நகரில் புகுந்த பிறகும் இனிய காட்சிகள் தொடர்கின்றன. கோபுர வாயிலில் புகுந்து ஊரிலுள்ள அம்பலங்களுக்கு வந்தால் அங்கே அயலூரி லிருந்து வந்து கூத்தர்கள் தங்கியுள்ளனர். நன்னனுக்குக் கையுறையாகப் பலரும் கொண்டு வந்து வைத்துள்ள வற்றைக் கண்டால் அதுவே அழகிய காட்சி. கோபுர வாயிலருகேயுள்ள முன்றில்களில் இந்தக் காட்சி வந்து காண்பார் தம் சிந்தைக்குச் செந்தேன் நல்கும். இள நடையுள்ள ஆமான் கன்று, வாய்திறவாக் கரடிக்குட்டி, வலிய தலையினையுடைய பெரிய கிடாய், பாம்பின் வலி யழித்த சிறிய கண்ணுள்ள கீரிப்பிள்ளை, மரையான் குழவி, வளைந்த காலையுடைய ஆண் உடும்பு, மலையிலாடும் மயில், பெட்டையைத் தன் குரலாலே கூப்பிடும் காட்டுச் சேவல், பலாப்பழம், மாம்பழம், நறைக்கொடி, நூற்றைக் கிழங்கு, கற்பூரம், மாணிக்கம், யானைக் கொம்புகள், காந்தட்பூ, புன்னைப்பூ, மஞ்சாடிப்பூ, சந்தனம், மிளகின் காய்க்குலை இவ்வளவும் அங்கே வைக்கப்பெற்றுள்ளன. அம்மட்டோ ? மூங்கிற் குழாய்கள் பல உள்ளன. அக் குழாய்கள் சிலவற்றில் கள்ளின் தெளிவும் சிலவற்றில் தேனடையும் ஈரப் பலாவின் பழமும் உள்ளன ! இவ் வளவும் நன்னனுக்குக் காணிக்கை.

காண்பதற்கு இனியவற்றைக் கண் குளிரக் காணுங்கள் என்கிறான் கூத்தன். அவன் கூற்றின் பொருள் இப்போது நன்கு புரியும். நன்னன் நகருக்குச்

செல்லும் வழியிலிருந்து அவன் அரண்மனை வாயில் வரை இனிய காட்சிகள் ஒன்றன் பின் ஒன்று நெருங்கி நின்று இன்பம் சொரிகின்றன. காண்பதற்கு இனியவற்றைக் கண்குளிரக் காணுங்கள் என்று கூத்தன் இடையில் ஓரிடத்தில் கூறுவது அங்கே உள்ள காட்சிகள் பற்றி மட்டுமோ? நன்னன் மலை நாட்டில் எங்கும் நிறைந்து நிற்கும் நற்காட்சிகள் யாவும் எண்ணியே அவன் கூறுகிறான்.

உண்பதற்கு இனியவற்றைப் பாராட்டி உண்ணுங்கள் என்கிறான் கூத்தன். நன்னனைக் காணச் செல்லும் கூத்தர் வேடுவர்களுடைய சிறிய ஊர்களிலே தங்கும் போது நல்லுணவுகளைப் பெறுகின்றனர்.

மலையிலுள்ள அரியவழியில் இறங்கிச்சென்று அதன் பக்கத்திலுள்ள சீறூர்களிலே கூத்தர் பெறும் உணவு மிகவும் சுவையுடையது. ஊரிலுள்ளார் கூறும் இனிய மொழிகள் முதலில் களைப்பைப் போக்கிக் களிப்பை உண்டாக்குகின்றன. அவர்கள் தரும் உணவோ—

*நெய்யில் வெந்த பொரியல்!*
*அழகிய தினைச்சோறு!*
*பக்குவம் செய்யப்பெற்ற!*
*உடும்பின் தசை!*
*கடமானுடைய கொழுத்த இறைச்சி!*
*முள்ளம் பன்றியின் இறைச்சி!*
*தேனாலாகிய கள்ளின் தெளிவு!*
*நெல்லாலாகிய கள்!*

இவ்வளவும் உணவாக வேண்டுவார் வேண்டுமளவும் வேண்டாமலே கிடைக்கின்றன. சீறூர் மக்கள் வற்புறுத்தி உண்ணச் செய்கிறார்கள். இவ்வளவும் உண்ட பிறகு உறங்கிக் காலையில் எழுந்ததும் மயக்கந்தீர

அவர்கள் தரும் உணவு சிறந்தது. பலாவிதையின் மாவையும் புளியையும் கலந்துவைத்த மோருலையில் மூங்கிலரிசியைச் சொரிந்து ஆக்கிய உணவைத் தருகின்றனர். தருவோர் யாவர்? குறமங்கையர் உண்பிக்கின்றனர் இந்நறிய உணவை! சந்தனம், அகில், பொன், மணி முதலியவற்றையும் பரிசிலாக அளிக்கின்றனர் அச்சீறூர் மாந்தர்!

காட்டு வழியிலேயும் வழியேவிருந்து வழங்குகிறது. எப்படி என்பீர்? உயர்ந்த பரணின் மேலிருந்து புனத்தைக் காப்பவன் எய்த அம்பால் தன் மார்பிலே புண் மிகுந்து அந்த அம்பு பாய்ந்த நிலையில் ஓடிப்போய் வழியில் கிடக்கிறது கொழுத்த பன்றி! அந்தப் பன்றியை இழைந்த மூங்கிலிலிருந்து உண்டாகிய தீயினாலே வதக்கி மயிர்போகச் சீவி உண்ணலாம். உண்டபிறகு சுனை நீரைக் குடிக்கலாம். எஞ்சிய தசையை மூட்டையாகக் கட்டி எடுத்துச் செல்லலாம். இதுதான் காட்டு வழி வழங்கும் இனிய உணவு! இது வழி, வழங்கும் உணவு. அந்த வழியில் வாழ்வோர் வழங்கும் உணவு எது தெரியுமா?

இனிய பாலை இடையர் கொண்டுவந்து சொரிகின்றனர். கூத்தர் குடித்து மகிழவே அவர்கள் சொரிகின்றனர்.

இரவில் ஆட்டு மந்தைகளிலே புகுந்து கூத்தர் பெறும் உணவு பாற்சோறும் பாலும்!

ஆட்டுமந்தைகளைக் கடந்து அப்பாற்போனால் எதிர்ப்படும் நாடு காக்கும் வேடர்களும் நல்லுணவு தருகின்றனர். நன்னனிடம் செல்லுகின்றோம் என்று கூத்தர் நவின்றதும் வேடர்தரும் உணவு நல்ல நல்ல கிழங்குகளும் தசைகளுமாகும். வற்புறுத்தி வற்புறுத்தி

இவ்வுணவைப் பண்பாடும் கூத்தரை உண்ணச்செய்து மகிழ்கின்றனர் வேடர் !

அவர்களைக் கடந்துசென்றதும் புல்வேய்ந்த குடிசைகளில் உள்ள குடிகள் புன்னகை முகத்துடன் புளியங் கூழைத் தருகின்றனர். இரவு உணவாக இதனை அளிக்கின்றனர். நெய்யாலாகிய சோறும் தினைமாவும் நாளும் கிடைக்கின்றன.

அறுகம்புல் பரந்த இடங்களையும் விளைநிலங்களையும் சோலைகளையும் கொண்ட நன்னனது தண்பணை நாட்டை அடைந்ததும் கூத்தர் பெறும் உணவு சுவையுடைது. உழவர் நெல்லை முகந்து தருகின்றனர். கள் விற்கும் வலையர்மகளிர் வாளைமீனின் தசையை வரால் மீனின் தசையோடு கலந்து கொடுக்கின்றனர். இவைகளைக் கூத்தர் உண்டதும் கள்ளின் தெளிவையும் தருகின்றனர். களங்கள் தோறும் இந்நல்லுணவு கிடைக்கிறது. அது மட்டுமோ? நன்னனே உண்ணக்கூடிய சிறப்புடைய உணவும் கிடைக்கிறது.

உண்பதற்கு இனியவற்றைப் பாராட்டி உண்ணுங்கள் என்று கூத்தன் கூறுவது அவன் இவ்வாறெல்லாம் நன்னன் நாட்டில் செல்லும்போது தான் பெற்ற இந்நுகர்ச்சியை எண்ணியேயாதல் வேண்டும் !

கேட்பதற்கு இனியவற்றைச் செவிகுளிரக் கேளுங்கள் என்று கூத்தன் கூறுகிறானல்லவா? எது குறித்து அவன் இவ்வாறு கூறுகிறான். மனநலம் மிக்க மன்னன் குடிகள்— வளநலம் மிக்க மலைநிலம் வாழும் குடிகள்-உளநலம் பெற்றி உரைக்கவேண்டுமோ? வறுமையால் வாடிவரும் கூத்தனும் சுற்றமும் வழியிலுள்ளோர், வரவேற்பதற்கென்று இனிய மொழிகளே கூறுகின்றனர். இடைச்சேரியிலுள்ளோரும் நாடுகாக்கும் வேடரும்,

களத்தில் உள்ள உழவரும், குறத்தியரும் வலையர் மகளிரும், வயிற்றுக்கு ஈவதற்கு முன்பு, அவர்கள் முகம் மலர அகம் மலர்ந்து கூறும் இனிய உறைகள் அவர்கள் செவிக்கு நல்கும் உணவேயாகும்! கூத்தர் செவிகுளிரக் கேட்கின்றனர், நல்லுணவு தந்து விருந்தூட்டுவோர், விருந்து முடிந்ததும் தங்கள் நிலவளமும் வாழ்வின் வளமும் மன்னன் குணவளமும் கூறுவர். முன்பின் அறியா விருந்தினரோடு இத்தகைய உரையாடுதலே முறையாகுமன்றோ? இதையெல்லாம் எண்ணியே, கேட்பதற்கு இனியவற்றைச் செவிகுளிரக் கேளுங்கள் என்கிறுன் கூத்தன். வற்புறுத்தி உண்ணச் செய்யும் விருந்தினர் பின் சொல்லும் உரை இன்புறுத்தும் பண்பு தானே பெற்றிருக்கும்? அதனுல்தான் கூத்தன் அவ்வாறு கூறுகிறுன்.

நன்னனை நாடிச்செல்வோர் அவன் மலைநாட்டிலும் காட்டுநாட்டிலும் காண்பதற்கு இனியவற்றைக் கண் குளிரக் காணுகின்றனர்; கேட்பதற்கு இனியவற்றைச் செவிகுளிரக் கேட்கின்றனர்; உண்பதற்கு இனியவற்றைப் பாராட்டி உண்ணுகின்றனர்! மேலும் ‘மலைபடுகடாம் மாதிரத்து இயம்பக்’ கேட்கின்றனர். ஆகையினுலே தான் இவையெல்லாம் ஒரு சேர எண்ணிய புலவர், நன்னனுடைய மலை விழாவை ஒத்தது என்று கூறுகிறுர்.

*“ வியலிடம் பெருஅ விழுப் பெரு நியமத்*
*தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென*
*இகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்*
*கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு ”*

என்றும் கூறுகிறுன் கூத்தன். திருநாள் என்று சொல்லும்படி மக்கள் நிறைந்து கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடு திரிவதற்கு இடம் பெருத சீரிய பெரிய

அங்காடித் தெரு பற்றிக் கூத்தன் கூறுகிறான். இத்தெருவிலேயும் விழாக்கோலம் நாளும் இருக்கிறது. இத்தெருவையும் பலகுறுந் தெருக்களையும் கடந்து, வீரர்கள் வேல்கள் சார்த்தி வைத்திருக்கும் மன்னன் கோபுர வாயிலில் ஐயமின்றிப் புகுந்து கூத்தர் நன்னனைச் சார்ந்ததும், அவன் அரண்மனையில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நாளும் விழாநாளாகிறது. கூத்தர் நன்னனைக் கண்டு மகிழ்கின்றனர் ; நன்னனோ கூத்தரைக் கண்டு அவர்கள் மகிழ்வதைக் காட்டிலும் தான் பெரிதும் மகிழ்கிறான், நூலின் போக்கு வரவு தெரியாத நுண்ணிய உடையைக் கூத்தர் தம் இடையிலே உடுத்தச் செய்கிறான். இனிய தசைகளும் வெண்ணெல் அரிசியும் சேர்ந்த உணவை, தலைநாள் போன்ற விருப்பத்துடன் தட்டில்லாமல் கூத்தர்க்கு நன்னன் தருகிறான். விடைகேட்கும்போதோ, பிரிவிற்கு வருந்திப் பின் நன்னன் தரும் பரிசில் பெருமதிப்புடையது. கூத்தனுக்குப் பொற்றாமரை சூட்டுகிறான் ; விறலியர் பேரணி கலங்களைப் பூணுகின்றனர். கூத்தனும் சுற்றமும் நிதியமும் தேர்களும் யானைகளும் பசுத்திரள்களும் குதிரைகளும் பெறுகின்றனர். விழா அளிக்கும் உணர்வை இப்பரிசில் அளிக்கும் என்றுகூறவும் வேண்டுமோ ? இப் பெரு நலமெல்லாம் பெற்று மகிழும் கூத்தன் நன்னன் மலையில் நாளும் திருநாளே காண்கிறான் ;

# குறுந்தொகை அமுது

சுப. அண்ணாமலை B.O.L (HONS)

**மா**ந்தரின் மனத்திற்கு மகிழ்ச்சியும் உணர்வும் தரக் கூடிய கலைகள் பல. அவைகளில் கவிஞர்கள் அறிவு என்னும் எழுதுகோலால் கற்பனை வண்ணங் குழைத்துத் தீட்டித்தரும் சொல்லோவியமாகிய கவிதை மிகச் சிறந்த தாகும். கவிதையில் உள்ள ஓசை நம் காதுக்கு விருந்தாவ தோடு, அதில் உயிராக நிற்கும் உணர்ச்சியும் கருத்தும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. கள் உண்ப வர்கள் அதன் மயக்கத்தால் அறிவை இழந்து தன் துன்பத்தை மறந்து இன்பம் பெறுகிறார்கள். ஆனால் கவிதை படிப்போர் கற்பனை உலகில் பறந்து திரிந்து, களிப்படையும்போதே அறிவையும் வளர்த்துக் கொள்ளு கிறார்கள்.

மக்கள் இனம் அடையும் நாகரிகத்தின் முதிர்ச்சியே கவிதை மலர்கள் அவர்களிடையே அரும்பி மலர்வதற்குக் காரணம் என்று சொல்லலாம். நமது அருமைத் தமிழகத் தில் ஏறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே கவிஞர்கள் தோன்றித் தேனும் பாலும் கனிச் சாறும் கலந்து மழையாகப் பொழிவது போலக் கவிமழை பொழிந்தார்கள் என்றால், தமிழ்க் குடிமக்கள் மிகப்

பழைய காலத்திலேயே நாகரிகத்தின் எல்லைக் கோட்டில் நின்றூர்கள் என்பது விளங்குகிறதல்லவா ?

பழந்தமிழ்ப் புலவர்கள் பாடிய பைந்தமிழ்ப் பாடல்களில் கால வெள்ளத்தில் மறைந்தவை போக, இன்று வரை வாழ்ந்திருப்பவை சங்க இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. அவை எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என இரண்டு பிரிவாக உள்ளன. இப்பெயர்களினுள்ளே ஒரு சிறு வரலாறு மறைந்து கிடக்கிறது. இன்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன், பல்வேறு காலங்களில் வாழ்ந்த கவிஞர்கள் தீட்டிய தனித் தனிக் கவிதைகள் தமிழ் நாட்டின் பல்வேறு ஊர்களில் சிதறிக் கிடந்தன. அவற்றை அப்படியே விட்டு விட்டால், படித்துச் சுவைப்பவர் இல்லாமல் அழிந்து விடும் எனக் கருதிய பிற்கால அறிஞர்கள்—கி. பி. இரண்டாம் நூற்றூண்டில் வாழ்ந்தவர்கள்—ஊர்கள் தோறும் சென்று கவிதைகளைச் சேர்த்து, அவற்றைப் பல வகையாகப் பிரித்துத் தனித்தனி நூல்களாகத் தொகுத்தார்கள். இவ்வாறு தொகுக்கப்பட்ட எட்டு நூல்களே எட்டுத் தொகை என்று அழைக்கப்படுகின்றன. பத்துப் பாட்டு என்பது தனித் தனிப் புலவர்கள் வரைந்த நீண்ட பாடல்கள் பத்துக் கொண்ட ஒரு தொகை நூல்.

எட்டுத் தொகை நூல்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அழகு, அன்பு, பண்பு முதலியவற்றில் ஒருவரை ஒருவர் ஒத்த, இளமைப் பருவம் உடைய ஆடவனும் ஆரணங்கும் விதிவசத்தால் ஓர் இடத்தில் சந்தித்துக் கருத்து இசைந்து காதல் கொள்ளுவதையும், அவர்களின் காதல் வானத்து வளர்பிறை போல், மண்ணில் வரும் செழும் பயிர் போல் வளர்வதையும், சுற்றுப் புறச் சூழ்நிலைகளாலும் சமூகக் கட்டுப்பாடுகளாலும் காதலர்

உள்ளம் பல உணர்ச்சிகளுக்குள்ளாவதையும், அவர்கள் கனவு நனவாகி, இன்பம் பொங்கும் இல்லறம் மலர் வதையும், ஒருவரை ஒருவர் பிரியும் காலத்தில் அவர்கள் நெருப்பில் விழுந்த புழுவெனத் துடிப்பதையும், பிரிந்தவர் கூடி அன்பு என்னும் அணி விளக்கேற்றி அழகுக் கடவுளை வழிபட்டு, இன்புற்று வாழ்வதையும் தொடர்ச்சி யாக ஒரு கதை போல் கூருமல், தனித்தனி நிகழ்ச்சிச் சித்திரமாக—உணர்ச்சிப் படமாகத் தீட்டிக் காட்டுபவை அகப் பொருள் நூல்கள். இவை எட்டுத் தொகையின் ஒரு பிரிவாகும். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை முதலியவை இப்பிரிவைச் சேரும். மற்ெெறாரு பிரிவாக நிற்கும் நூல்கள் புறப்பொருள் நூல்கள் எனப் படும். அவை பழந்தமிழரின் அறமுறை தவருத அரசியல், 'போர் முகத்தில் எவர் வரினும் புறம் கொடாத' வீரம், புறங்காட்டி ஓடும் பகைவரின் முதுகிலே போர் வாளை வீசாத பெருந்தன்மை, புறமுதுகில் தவறிப் புண் பட்டாலும் உண்ணு நோன்பு இருந்து உயிர் விடும் மான உணர்ச்சி, கலை வளர்க்கும் புலவர்க்குக் களிறும் குதிரை யும் வழங்கும் கொடைத் தன்மை ஆகியவற்றை அழகான சொல்லோவியங்களாகத் தந்து தமிழ் மக்களுக்கு அழியாப் பெருமை யளிக்கின்றன.

அகப்பொருள் நூல்களில் குறுந்தொகையும் ஒன்ருக விளங்குகிறது என மேலே கூறினேம். குறுந்தடி என்பது குள்ள வடிவுள்ள தடியைக் குறிப்பதுபோல், குறுந் தொகை என்னும் பெயர் நான்கு அடி முதல் எட்டு அடி வரை உள்ள, குள்ள வடிவான பாடல்களைக்கொண்டு தொகுக்கப்பட்ட நூலைக் குறிக்கும். தொகை நூல்களை உருவாக்கிய அறிஞர்கள், அகப்பொருளாகிய காதல் ஒழுக்கத்தைப் பாடும் 1200 பாடல்களை, அவற்றின் அடியளவை அடிப்படையாக வைத்து மூன்று வகை

யாகப் பிரித்து ஒவ்வொரு வகையைச் சேர்ந்த பாடல் களையும் ஒரு நூலாக்கினார்கள். அவ்வாறு வகைப்பட்ட பாடல்களில் மிகக் குறைந்த அடியளவுடையவை குறுந் தொகையாகவும், மிக அதிகமான அடியளவுடையவை அகநானூறு அல்லது நெடுந்தொகையாகவும் நடுத்தரமான அடியளவுடையவை நற்றிணையாகவும் உருப்பெற்றன. இந்த மூன்று நூல்களில் ஒவ்வொன்றும் 400 பாடல்களை உடையவையாகும்.

குறுந்தொகைப் பாடல்கள் மொத்தம் 205 புலவர் களால் பாடப்பெற்றவை. இவர்கள் பல்வேறு காலங் களில், வெவ்வேறு ஊர்களில் வாழ்ந்தவர்கள். இவர் களுடைய பெயர்களை ஆராய்வதே ஒரு தனி ஆராய்ச்சி யாகும். அதை இங்கே நடத்துவது நம் நோக்கம் அல்ல. ஆனால் 'ஓரேர் உழவனார்', 'கங்குல் வெள்ளத்தார்' என்னும் இரண்டு புலவர்கள், இப்பெயர்களைப் பெற்ற வரலாறு மிகச் சுவையானது ஆதலால் அதை மட்டும் அறிந்து மேலே செல்வோம்.

ஓர் ஆடவன் தனது அன்பு மனைவியைப் பிரிந்து, பொருள் தேடுவதற்காக மிகத் தொலைவில் உள்ள ஊர் களுக்குச் சென்றான். அவளிடம் விடை பெற்றபோது, வாட்டம் அவள் முகத்தில் குடிகொண்டிருந்ததையும், கருவண்டு போன்ற கண்களின் ஓரத்தில் கண்ணீர் எட்டிப் பார்த்ததையும், இலேசான பெருமூச்சு அவள் மூக்கின் வழியே இழைந்ததையும் நினைத்துக்கொண்டே வழிகள் பலவற்றைக் கடந்தான். அயல் நாடு சேர்ந்து வாணிகம் நடத்தினான். ஆயிரக் கணக்காகச் செல்வம் சேர்த்தான். செல்வம் சேர்க்கும் முயற்சியில் நாட்கள் சென்றபோது அவன் மனம் மனைவியைப் பெரிதும் மறந்திருந்தது என்றே கூறலாம். ஆனால், போதுமான

அளவு பொருள் சேர்ந்தபின், ஊருக்குத் திரும்புவதற் கென அவனோடு வந்த நண்பர்கள் குறித்த நாள் நெருங்க நெருங்க அவன் மனம் ஒரு நிலையில் நில்லாமல் தவிக்கத் தொடங்கியது. எழில் பொங்கும் மனைவியின் உருவம் அவனது நினைவுத் திரையில் வந்து நின்றது. அவளுடன் இரவும் பகலும் இணைபிரியாமல் இருந்த இன்ப வாழ்க்கையின் நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து மறைந்தன. அவளது இனிய குரல் இலேசாக வந்து அவன் காதில் படுவது போல் இருந்தது. மறுகணம், அவன் பயணப்பட்டபோது, துயரமே உருவாய் அவள் நின்ற காட்சியும் தோன்றியது. அவ்வளவுதான். அவளை அக்கணத்திலேயே பார்க்கவேண்டும், பேசவேண்டும், ஆறுதல் சொல்லவேண்டும் என்று துடித்து நின்றது அவன் மனம். அவனுடைய ஊரோ பக்கத்தில் இல்லை. நடந்து செல்லப் பல நாட்கள் ஆகும். வழியில் எத்தனையோ இடையூறுகள் காத்திருக்கும். இதை யெல்லாம் எண்ணாமல், அன்புக்கு இனியவளை உடனே பார்க்கவேண்டும் என்று முந்தியது. தன் மனத்தின் வேகத்தைக் கண்ட அவன் வேதனைப் பட்டான். அவ் வேதனையில் இன்பமும் இருந்தது ; துன்பமும் இருந்தது. அவ்வுணர்ச்சியைத்தான் ஓரேர் உழவனார் எழுத்தோவிய மாகத் தீட்டியிருக்கிறார். மனைவியை நினைத்து ஏங்கும் அந்த ஆடவனே கூறுவது போல அவர் பாடல் அமைந் துள்ளது. மனைவியைக் காணத் துடித்த தன் மனத்தின் வேகத்தைக் காட்ட மிக அழகான உவமை ஒன்றை அவன் கூறுகிறான் :

புன்செய்க்காணி சிலவற்றை உடைய ஓர் உழவனிடம் ஒரே ஒரு கலப்பைதான் இருக்கிறது. மழை பெய்தவுடன் ஈரம் உலர்வதற்குள் புன்செய்க் காணியை உழுதுவிடுவது தான் உழவர்களின் வழக்கம். நன்செய் நிலத்தில் மழை

பெய்து சில நாட்கள் வரை நீர் தேங்கியிருப்பது போல் புன்செய்யில் இராததே இதற்குக் காரணம். விதைப்புக் காலம் வருகிறது. மழையும் பெய்கிறது. அப்பொழுது ஒரே ஒரு கலப்பையை வைத்திருக்கும் ஏழை உழவன், ஈரம் உலர்வதற்குள் தனது காணி முழுவதும் உழுதுவிட வேண்டும் என்ற பரபரப்போடு எவ்வளவு வேகமாக உழத் தொடங்குவான் ? அவ்வளவு வேகம் மனைவியைக் காணச் செல்லுவதில் இருந்ததாம் அந்த ஆண்மகனின் மனத்தில். அரைக்கணமும் பிரியாமல் இருந்த மனைவியை விட்டுப் பல நாட்கள் தனியே இருந்ததால் அவன் மனத்தில் அவளைக் காண்பதற்கு எழுந்த வேகமும் துடிப்பும் எவ்வளவு என்று அளந்து காட்டும் இந்த உவமையைக்கூறிய புலவரின் திறமையை என்னென்பது? அவர் பாடிய பாடல்,

"ஆடு அமை புரையும் வனப்பின் பணைத்தோள்
பேர் அமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ் சேண் ஆர் இடையது வே ; நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர் ஏர் உழவன் போலப்
பெரு விதுப்பு உற்றன்றால் ; நோகோ யானே"

என்பது.

[ஆடு அமை புரையும்-ஆடுகின்ற மூங்கிலை ஒத்த ; சேண்-தொலைவு ; விதுப்பு-விரைவு.]

இந்தப் பாடலைப் படித்து, உவமையின் அழகையும் பொருத்தத்தையும் மிகவும் பாராட்டி ரசித்த தமிழ் மக்கள் இதை இயற்றிய புலவரை 'ஓரேர் உழவனார்' என்றே அழைக்கத் தொடங்கினார்கள். அவருடைய சொந்தப் பெயர் நாளடைவில் மறைந்து விட்டது.

காதலனைப் பிரிந்து கரைகாணுத் துயரத்தில் முழுகி வருந்தும் மங்கை ஒருத்தியின் மன உணர்ச்சியை, நம் உள்ளம் உருகுமாறு சொற்சித்திரமாக வரைந்துள்ளார் 'கங்குல் வெள்ளத்தார்' என்னும் புலவர். அம் மங்கையின் காதல் அவள் தாய் தந்தையர் அறியாமல் வளர்ந்ததாகும். அவளுடைய நெஞ்சங் கவர்ந்த கள்வன் அயலூரில் வாழ்ந்த ஓர் இளைஞன். உள்ளத்தில் வெள்ள மிடும் அன்போடு ஒவ்வொரு நாளும் அவன் அவளைக் காண வந்தான். அமுதும் தேனும் ஒழுகப் பேசினுன். அவர்கள் காதல் நாளொரு தளிரும் பொழுதொரு அரும்பும் விட்டுத் தழைத்தது. அப்பயிருக்கு நீரும் எருவும் இட்டு, வேலி கட்டி வளர்த்தாள் உயிராகப் பழகிய தோழி ஒருத்தி.

நாள் தோறும் வந்த காதலன் என்ன காரணத்தாலோ சில நாள் வராமல் இருந்தான். அவனைப் பாராமல் இருந்த ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாக இருந்தது காதலிக்கு மாலை நேரம் வந்தால் மரணக்காலம் வந்துவிட்டது போல் அவள் உணர்வாள். இரவோ கொடிய எமனைப்போல் தோன்றும். காதலனேடு இருக்கும் போது கணக்கிலா இன்பம் தருகின்ற மாலையும் இரவும் அவனது பிரிவில் நெருப்பைவிடக் கொடியவையாக நின்று அவளை வாட்டின. உணவை மறந்தாள்—உறக்கம் துறந்தாள். பெற்ரேர் அவளது கவலைக்கும் காரணம் தெரியாமல் திகைத்தனர். இதைப் பார்த்த தோழி அவளை அணுகிக் காதலன் பிரிந்த போது கவலைப்பட்டுக் கண்ணீர் சிந்தினல் பெற்ரேரும் உற்ரேரும் சந்தேகம் கொள்ள இடமுண்டாகும். ஆதலால் மனத்தைத் தேற்றி அமைதி யாக இருப்பதே கன்னிப் பெண்ணுக்கு அழகு என்று அறிவுரை கூறினுள். தனது நிலையை நன்கு அறிந்த தோழியே அறிவுரை சொல்லக் கிளம்பிவிட்டதைக்

கண்ட, அந்நங்கையின் துயரம் இன்னும் பெருகியது. அவள் இதயத்திலிருந்து நீண்ட பெருமூச்சு வெளிந் தோடியது. கண்களிலிருந்து ஒரு சில நீர்த்துளிகள் உருண்டோடின.

அவள் சொல்லுகிறாள் : தோழி, பகல் நேரத்தை எப்படியோ கழித்து விடுகிறேன். ஆனால் பகலவன் கதிர்களை மடக்கிக் கொண்டு மறைகின்ற போது வந்து நிற்கிறதே பாழும் மாலை நேரம் ! அந்த நேரத்தில் முல்லைப் பூ மலர்ந்து தொலைக்கிறதே ! அதைப் பார்த்தால் என்னை நோக்கிக் கேலியாகச் சிரிப்பது போல் தோன்றுகின்றதே ! அதைப் பொறுத்துக் கொண்டு எப்படி அமைதியா யிருப்பேன் ? மாலை நேரம் வந்துவிட்டால் என் உடம் பெல்லாம் நடுங்குகிறது; உள்ளம் துடிக்கிறது. ஒரு வகையான மயக்கம் உண்டாகிறது. செய்வதற்குரிய வேலைகளை மறந்து, நினைவிழந்து நிற்கிறேன். அந்திப் பொழுது சிறிது நேரம்தான் என்று சொல்லுகிறார்கள், எனக்கோ அது நீந்த முடியாத கடல் போல் மிக நீண்ட நேரமாகத் தோன்றுகிறது. இரவு என்னும் கரையைக் குறியாக வைத்து, அந்தக் கடலை நீந்திக் கைசளைத்து மனம் இளைத்து நிற்கும் போது, அந்த இரவும் விடியாத இரவாக விரிந்து கொண்டே செல்லுகிறதே! மாலை என்னும் கடலை விட இரவு வெள்ளம் மிக மிகப் பெரிதாகவன்றோ இருக்கிறது ? இது இவ்வாறு இருக்கு மானால், மாலைப் பொழுதைப் பொறுமையாக நம்பிக்கை யோடு கழிப்பதில்தான் என்ன பயன் இருக்கிறது ? :"

*" எல்லை கழிய முல்லை மலரக்*
*கதிர்சினம் தணிந்த கையறு மாலையும்*
*இரவரம்பாக நீந்தினம் ஆயின்*
*எவன் கொல் வாழி தோழி*
*கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே "*

[எல்லை—பகல்; கையறுமாலை-செயல் மறந்து நிற்பதற்குக் காரணமான மாலை; வரம்பு-கரை.]

இது அவள் பேச்சு. ஒரு கடலை நீந்துகின்றவன் தொலைவில் தெரிகின்ற ஏதோ ஒன்றைக் கரையென்று நினைத்து, நம்பிக்கையோடு நீந்தி, அதை அடைந்தபோது அது மற்றொரு பெரிய கடலாக—அவன் நீந்தியதை விடப் பெரிய கடலாக இருக்குமானால், அதுவரை நீந்தி வந்த தெல்லாம் வீண் என்று அவன் மனம் வாடிச் சோர்ந்து விடும் அல்லவா? அதே போல், இரவுப் பொழுது வந்தால் ஏதோ சிறிது அமைதியடையலாம் என்று நம்பி, மாலைப் பொழுதில் தனக்கு உண்டான மனத் துன்பத்தை யெல்லாம் ஒருவகையாகப் பொறுத்துக் கொண்ட காதலி. இரவு நேரம் மாலையை விடக் கொடுமையானதாய், விடியாமல் நீண்டு நின்ற போது துயரத்தின் எல்லையைக் கண்டாள். தூக்கத்தைக் கொள்ளை கொண்டு துயரத்தை அளித்த அந்த இரவைப் பழித்தாள். அது எப்பொழுது விடியும் என்று ஏங்கினாள். அவள் அனுபவித்த வேதனை உணர்ச்சியை அப்படியே சித்திரிக்கின்றது கவிதையில் உள்ள "கங்குல் வெள்ளம்" என்னும் தொடர். கவிஞர் தாம் வரைந்த உணர்ச்சிச் சித்திரத்தின் உயிர்நிலையாக இத் தொடரை அமைத்ததைப் பெரிதும் சுவைத்த தமிழ் மக்கள் அவரைக் 'கங்குல் வெள்ளத்தார்' என்றே அழைக்கத் தொடங்கினார்கள்.

இவ்வாறு கவிஞர்களின் பாடல்களில் வரும் சிறப்பான சொல் தொடரைக் கொண்டே அவர்களுக்குப் பெயர் வழங்கினர் தமிழ் மக்கள் என்றால் அவர்களுடைய ரசிகத் தன்மையை என்னென்பது?

குறுந்தொகைப் பாடல்களை இயற்றிய புலவர்கள் அழகான உவமைகளைக் கையாளுவதில் கை தேர்ந்த

வர்கள், சிறிய பாடல்களில், ஒன்றிரண்டு வரிகளில் அமையும் உவமைகள் நம் மனக் கண் முன் ஒரு படம் போல நின்று கவிதையில் சித்திரிக்கப்படும் நிகழ்ச்சியையோ, உணர்ச்சியையோ உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளிவாக விளக்கி விடுகின்றன. காதலன் அல்லது தலைவன், காதலி அல்லது தலைவி, தோழி முதலிய கவிதை மாந்தர்களில் ஒருவர் மற்றொருவரிடம் பேசும் பேச்சில் மிகச் சிறந்த உவமைகள் அமைந்து, பேசுபவரின் கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்துகின்றன. தலைவனின் மன உணர்ச்சியை நன்கு விளக்கும் உவமையைக் கூறிய ஓரேர் உழவனுரைக் குறித்து மேலே அறிந்தோம், இனி தோழி தலைவனிடம் பேசுவதாக அமைந்துள்ள ஒரு கவிதையில், அவள் தன் கருத்தை அவன் மனத்தில் பதிய-வைப்பதற்குக் கையாளும் உவமை ஒன்றைக் காண்போம் :

மங்கை நல்லாள் ஒருத்தியோடு நெருங்கிப் பழகி அன்பை வளர்த்த ஓர் ஆடவன், அவளை மணந்து கொள்வதற்குத் தேவையான செல்வத்தை ஈட்டுவதற்காகப் புறப்பட்டான். அவனிடம் தோழி சிலவற்றைச் சொல்ல எண்ணினுள். பணந் தேடுவதற்காகப் பிரிகின்றவன், இடையே மனம் மாறியோ, வேறு சூழ்நிலைகளாலோ தன் காதலியைக் கைவிட்டு விடக் கூடாதே என்னும் கவலை அவனைப் பிடித்துக் கொண்டது. கடிமணம் பெருத கன்னிப் பெண்ணின் கற்பிற்கு ஆதாரம் காதலனின் நாணயந்தானே ? அவன் துரோகம் செய்து கைவிட்டால், அவளுக்குக் கதியாவார் யார் ? அவள் உயிர் விடுவதன்றி வேறு வழியில்லை. ஆதலால் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள விரும்பிய தோழி, தலைவனின் மனம் தவருக நினைத்துப் புண்படாதவாறு மிக நாகரிகமாகப் பேசுகிருள் :

"ஐயா குழந்தையைத் தாய் கோபித்து அடிக்கும் போதும் அது அம்மா என்றுதான் அலறுகிறது. அன்னையின் அடிக்கும் கை கண்டு அதன் மனம் வேறு யாரையும் நாடுவதில்லை. அடித்தாலும் அணைத்தாலும் அவளே குழந்தைக்குக் கதி, என் தலைவி உன் காதலி அந்தக் குழந்தையைப் போன்றவள். நீ தீமை செய்து துன்பம் கொடுத்தாலும், நன்மை செய்து இன்பம் நல்கினுலும் அவளுக்குக் கதி நீயே, அவள் துன்பம் துடைக்க உன்னையன்றி வேறு யாரும் இல்லை.

*"....................சேர்ப்ப,*
*தாய் உடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு*
*அன்னு என்னும் குழவி போல*
*இன்னு செயினும் இனிது தலையளிப்பினும்*
*நின்வரைப்பினள் என் தோழி*
*தன்னுறு விழுமம் களைஞரோ இவளே"* என்று

கூறுகிருள்.

[சேர்ப்ப—தலைவனே ; தலையளிப்பினும்—பாதுகாத்தாலும்]

முன்பின் தெரியாத ஓர் ஆண்மகனைக் காதலித்து நம்பியிருக்கும் கற்புடைய மங்கையின் நிலை எத்தகையது என்பதைத் 'தாய்-குழந்தை' உவமை எவ்வளவு நன்ருகக் காட்டி விடுகிறது.! இது மட்டுமா ? கேட்கின்ற தலைவனின் மனத்தைப் புண்படுத்தி விடாமல், உயர்ந்த எண்ணத்தை அவனிடம் உண்டாக்கி, அவன் என்றென்றும் துரோகச் சிந்தை கொள்ள முடியாதபடி செய்து விடுகிறது இந்த அற்புத உவமை. இதனை அமைத்துக் கவிதை பாடிய புலவர் பெருந்தகை அம்மூவனுர் என்பவர்.

உண்மைக் கவிஞன் எவனும் உலகெங்கும் கண்ணுக்கு விருந்தாகப் பரந்து விரிந்து நிற்கும் இயற்கைக் காட்சியின் எழிலைக் கவிதையாகத் தீட்டாமல் இருக்க மாட்டான். அவனுடைய கவியுள்ளம் நெருங்கிய உறவு கொள்ளுவது இயற்கை யோடுதான், இயற்கையைக் கவிஞனின் வளர்ப்புத்தாய் என்றே கூறலாம். இங்கிலாந்து நாட்டில் தோன்றிய 'வேர்ட்ஸ் வொர்த்' 'டென்னிசன்' போன்ற கவிஞர்கள் இயற்கையை வருணிப்பதில் பேர் பெற்றவர்கள். அவர்கள் பிறப்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்த சங்கப் புலவர்கள் அவர்களை விடச் சிறந்த முறையில் இயற்கையைப் பாடியுள்ளார்கள். அவர்கள் அதற்கெனக் கையாண்ட முறை அழகானது; ஆற்றல் மிக்கது. மேலே சொல்லிய ஆங்கிலக் கவிஞர்கள் இயற்கையைத் தனியாகப் பாடினார்கள், ஆனால் தமிழகத்துப் பழம் புலவர்கள் அதனை வாழ்க்கையோடு பிணைத்துப் பாடினார்கள். வாழ்கின்ற மனிதரின் மனத்தில் காதல் காரணமாகத் தோன்றும் பலவகை உணர்ச்சிகளை — அவ்வுணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் நிகழ்ச்சிகளைப் பாடும் போது, அவற்றிற்கு ஏற்ற பின்னணிக் காட்சியாக இயற்கையைக் காட்டினார்கள் நாடகம் நடத்துவோர், கதை நிகழ்ச்சிகளுக்குத் தக்க பின்னணிக் காட்சியை மேடையில் அமைத்து, அந்நிகழ்ச்சிகள் காண்போரின் கருத்தில் நன்கு பதியும்படி செய்வதுபோல், சங்கப் புலவர்கள் மனிதரின் பல்வேறு உணர்ச்சிகளை நன்கு எடுத்துக் காட்டுவதற்காக இயற்கையைத் தம் கவிதை களில் பயன் படுத்தினார்கள். வாழ்க்கைக்கும் இயற்கைக் கும் உள்ள நுட்பமான தொடர்பை அவர்கள் அறிந் திருந்தார்கள் என்பதை அவர்களுடைய கவிதைகளால் அறிந்து மகிழலாம்.

குறுந்தொகையில், பேரி சாத்தன் என்னும் புலவர் குரங்குகளின் வாழ்க்கையை மிக அழகாகச் சித்திரித்துள்ளார். அவை அதிகமாக வாழ்வது மலேச்சாரலில் தான் அங்கு வளர்ந்துள்ள மரங்கள் அவை தாவி விளேயாடுவதற்கு ஏற்றவையாகவும், அவற்றிற்கு உணவூட்டுபவையாகவும் இருக்கின்றன. உயர்ந்து நிற்கும் மரங்களின் கிளேகளில் தன் பெண் குரங்கோடு தாவிக் குதித்துத் திரிந்தது ஓர் ஆண் குரங்கு. பெண் குரங்கின் வயிற்றில் இரண்டு குட்டிகள் தொற்றிக் கொண்டிருந்தன. குடும்பத்தோடு மலேச்சாரலில் உலாவிய அந்தக் குரங்கு பழங்கள் கனிந்து குலுங்கும் ஒரு மரத்தைக் கண்டது. விறு விறுவென அதன் மேல் ஏறியது, ஒவ்வொரு பழமாகப் பறித்துக் கீழே போட்டது. பெண் குரங்கு, தன் குட்டிகளே உட்கார வைத்துவிட்டு அப் பழங்களே எல்லாம் பொறுக்கிக் கெட்டுப் போனவற்றை எறிந்து நல்லவற்றை மட்டும் அவற்றிற்குக் கொடுத்துத் தானும் தின்றது. இக் காட்சியைப் புலவர் பாடுகிருர்.

" ..................கடுவன்
*ஊழ்உறு தீங்கனி உதிர்ப்பக் கீழ் இருந்து*
*ஏற்பன ஏற்பன உண்ணும்*
*பார்ப்புடை மந்திய மலே"*

[ஊழ் உறு—முறையாகப் பழுத்த ; பார்ப்பு—குட்டிகள்.]

இனி, இவ்வழகிய இயற்கைக் காட்சியைப் பின்னணியாகக் கொண்டு புலவர் வரையும் வாழ்க்கைஓவியத்தைக் காணலாம். பல நாள் வந்து அன்பு மொழி பேசிக் காதல் செய்த தன் காதலன் சில நாள் வராதிருந்த போது, ஓர் இளநங்கை மிகவும் வருந்தி, உடலும் உள்ளமும் சோர்ந்தாள். அவன் தன்னேப் பார்க்க வரும்போது, சிறு வயதில் வைத்து விளேயாடிய பொம்மையைத் தன்

கையில் வைத்திருந்தது கண்டு அவன் கேலி செய்ததையும் நினைத்துக் கொண்டார். இன்பமாகக் கழிந்த அந்த நாட்களை எண்ணி வருந்தினாள். இதைக் கண்ட தோழி பிரிந்த அன்பனை நினைத்து ஏங்குவது மணமாகாத பெண்ணுக்குத் தக்கதல்ல என்றும், ஊரார் அதை அறிந்தால் ஏச்சுக்கு இடமாகும் என்றும், மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அமைதியாயிருப்பதே முறை என்றும் கூறினாள். தலைவி, மேலே கண்ட குரங்குக் குடும்பத்தின் அன்பு வாழ்க்கையை எடுத்துக் கூறி, 'அவை வாழும் மலைச்சாரல் வழியாகத்தான் அவர் செல்வது வழக்கம். ஆண் குரங்கு தன் மனைவியாகிய மந்தியையும் குட்டிகளையும் எந்த நேரமும் பிரியாமல் இருப்பதையும், அவற்றிற்குக் கனி பறித்துக் கொடுத்து உண்ணச் செய்வதையும் காணும்போது கூட, என்னைத் தனியே விட்டுச் செல்லும் தம் கொடுமை அவருக்குப் புலனாகவில்லையே ? என்னை விரைவில் மணந்து கொண்டு குடும்பம் அமைத்து எந்நேரமும் பிரியாமல் வாழ வேண்டும் என்று அவர் எண்ணவில்லையே ? தோழி அவர் என்னையும், மாந்தளிர் போன்ற கை கால்களையுடைய என் விளையாட்டுப் பொம்மையையும் மறந்து விட்டார். அவ்வளவு கொடியவராகி விட்டார். இதை நினைக்கும் போதெல்லாம் என்னையறியாமல் துயரம் பொங்குகிறதே'' என்று சோகம்ததும்பக் கூறினாள் ;

*"உறுவளி உளரிய அந்தளிர் மாஅத்து*
*முறிகண்டன்ன மெல்லன் சிறடிச்*
*சிறு பசும் பாவையும் எம்மும் உள்ளார்*
*கொடியர் வாழி தோழி !"*

இது கவிதையின் முற்பகுதி. இதனையும் முன்னே கூறிய இயற்கை வருணனைப் பகுதியையும் சேர்த்துப்

படியுங்கள், காதல் வாழ்க்கையில் துன்பச் சுவை நிறைந்த ஒரு நிகழ்ச்சிக்கு இயற்கை அருமையான பின்னணியாக அமைவதைக் காணுங்கள். வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து, வாழ வழிகாட்டி நிற்கும் இத்தகைய இயற்கை வருணனைகள் குறுந்தொகையில் நிரம்ப இருக்கின்றன.

கலைஞர்கள் கலைச் செல்வங்களைப் புதிது புதிதாகப் படைப்பதன் நோக்கம் அவை மனிதரின் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளித்து இன்பம் தரவேண்டும் என்பது மட்டும் அல்ல. அதற்காக ஒரு கலைப் படைப்பு எழுமானால் அதை உயர்ந்ததாக மதிக்க முடியாது, மக்கள் வாழ்க்கையில் இருள் நீக்கி ஒளி காட்டும் சுடர்விளக்காகக் கலைகள் விளங்க வேண்டும் என்பதே உண்மைக் கலைஞர்களின் தலையான நோக்கம். கலைச் செல்வங்களில் சிறந்ததாகிய இலக்கியத்தில் தான் இந்த நோக்கம், நன்கு நிறைவேறுகிறது. சங்க இலக்கியங்களான அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்ற நூல்களில் கவிஞர்கள், நாடகத்தில் வருபவை போலப் பலவற்றைக் கற்பனை செய்து, நல்லவை, இனியவை உயர்ந்தவை யாவும் ஒரே இடத்தில், ஒருவருடைய வாழ்க்கையிலேயே அமைந்ததாகக் கூறுவதும் உயர் பண்புகள் நிறைந்த ஆடவனும் அன்பு, அறிவு, அழகு ஆகியவற்றில் சிறந்த மங்கை நல்லாளும் எல்லாவகைப் பொருத்தமும் உடையவராக, விதிவசத்தால் ஒருவரை ஒருவர் கண்டு, காதல் கொண்டு, மிக உயர்ந்த பண்பாட்டோடு பழகிக் காதற் பயிரை வளர்த்தார்கள் என்று கூறுவதும் பொதுவாக உலகில் நாம் காணக் கூடியதல்ல. ஆயினும் இத்தகைய உயர்ந்த வாழ்க்கையை இலட்சியமாகக் கொண்டு மக்கள் இனம் வாழ வேண்டும் என்பதே கவிஞர்களின் நோக்கம். நாடகம் போலவும், உலகியல் வாழ்க்கையை ஒத்தும் அமையுமாறு தங்கள்

கவிதையை இயற்றச் சங்கப் புலவர்கள் 'புலனெறி வழக்கம்' என்ற ஒரு இலக்கிய மரபை (*Literary Convention*) வகுத்துக் கொண்டார்கள். தொல்காப்பியர் இதனை,

*"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலனெறி வழக்கம்"* என்று பாடுகிறார்.

எனவே சங்க நூல்களில் வரும் அத்தனையும் உலகில் நடப்பவை அல்லது நடந்தவை என்று கருதக் கூடாது அவை யெல்லாம் இலட்சிய வாழ்க்கையில் நிகழ்பவை. மக்களுக்கு என்றும் மனம் கவர் பொருளாக நின்று வழிகாட்டுபவை.

மக்களின் வாழ்க்கையில், ஒவ்வொரு துறையிலும் எவ்வளவோ குறைபாடுகள் காணப் படுகின்றன. அவற்றைக் கண்டு கவிஞனின் மென்மையான மனம் வருந்துகிறது. குறைபாடுகள் எல்லாம் நீங்கி நல்ல சமுதாயம் உருவாக வேண்டும் என்று ஆசைப்படுகிறது. கற்பனை உலகில் உலவித் திரிந்து இலட்சிய வாழ்க்கையை உருவாக்குகிறது. இவ்வாறு கவிஞர்களின் மனம் கற்பனையில் ஈடுபடுவதைச் குறித்துக் கவியரசர் பாரதியார்,

*"பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்*
*நெட்டைக் கனவின் நிகழ்ச்சி"* என்று பாடுகின்றார்.

கவிஞர்களின் கற்பனையில் உருவாகும் இலட்சிய வாழ்க்கைதான் உலகியல் வாழ்க்கையோடு கலந்து இலக்கியமாகக் கலையுருவம் கொள்ளுகிறது. சங்கப் புலவர்கள் பாடிய அத்தனைக் கவிதைகளும் இத்தகைய இலக்கியங்களே. இவற்றில் இலட்சிய வாழ்க்கை படம் பிடித்துக் காட்டப் பெறுவதன்றி, அன்றாட வாழ்க்கைக் குதவும் நடை முறைக் கருத்துக்கள் பலவும் நிறைந்து

கிடக்கின்றன. குறுந்தொகையில் இவ்வாறு உள்ள சிறப்பு மிக்க கருத்துக்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

ஒருவன் தன் முன்னோர் தேடிவைத்த செல்வத்தை மேலும் மேலும் பெருக்காமல் அதையே செலவு செய்து கரைப்பது நல்லதல்ல. இது சோம்பலை வளர்க்கும். சோம்பல் பல தீமைகளுக்குத் தாயகமாகும். தன் முயற்சியால் செல்வம் சேர்க்காதவன், அதன் அருமை அறியாமல் தீய வழிகளில்பயன்படுத்துவான்! முன்னோரின் செல்வத்தை அடிமுதலாகக் கொண்டு வாணிகம் நடத்தும் முயற்சி வேண்டும். உடல் வருந்த உழைக்க வேண்டும் உழைப்பின் மதிப்பை உணர வேண்டும். தாமே வருந்தி உழைக்காமல் தந்தையும் பாட்டனும் தேடிய பொருளைக் கரைப்பவர் உணர்வுள்ள மனிதர்கள் அல்ல; உயிரற்ற பிணங்கள். இக் கருத்துக்களைக் கூறும்,

"உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்" என்ற வரி, குறுந்தொகைப் பாடல் ஒன்றில் வருகிறது.

மற்றொரு புலவர் வினையே ஆடவர்க்கு உயிரே" எனத் தமது பாடலில் கூறியுள்ளார். ஆண் மக்களே தம் அறிவாலும் உழைப்பாலும் ஒரு நாட்டை உருவாக்கு கிறார்கள். பலவகையான பணிகளை இடைவிடாமல் செய்து வீட்டு வாழ்க்கையும் நாட்டு வாழ்க்கையும் செம்மையாக நடைபெறச் செய்பவர்கள் அவர்களே. அவர்கள் செயல் அற்றுச் சோம்பிக் கிடந்தால் வீடு காடாகும்; நாடு பாழாகும். நாட்டின் மண் எவ்வளவு வளமுடையதாக இருப்பினும் ஆடவர்கள் சோம்பேறி களாக வாழ்வதாயின் அது விரைவில் கள்ளியும் முள்ளியும் வளரும் காடாக மாறும். வளமற்று வறண்டுகிடக்கும் மேட்டு நிலமும் ஆடவரின் உழைப்பால் பொன் கொழிக்கும் நன்னிலமாகும். இதைக் கருதித்தான்

ஔவையார் " நாடாயினும், காடாயினும், பள்ளமாயினும் மேடாயினும் எங்கெங்கு ஆடவர் நல்லவராக—உழைப் பாளிகளாக இருக்கிறார்களோ அந் நிலமெல்லாம் நல்ல நிலமாகும் " என்னும் பொருள் அமைந்த,

*" நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே "*

என்ற பாடலைப் புறநானூற்றில் பாடியுள்ளார். ஒரு நாட்டின் மேன்மையும் செல்வ வளமும் அந்நாட்டு ஆடவரின் உழைப்பைப் பொறுத்திருக்கின்றன. ஆதலின் ஆடவர் அனைவரும் உழைப்பும் அதற்கு ஏற்ற பிற தகுதிகளும் நிறைந்தவராக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றது. 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்னும் சிறு வழி. இவ்வாறு எத்தனையோ அரிய பொன்மொழிகள் குறுந்தொகையில் ஆங்காங்கு ஒளி வீசுகின்றன.

வாழ்க்கைக்கு வேண்டிய நீதிகளைக் கூறுவதோ டன்றி, உலகியல் உண்மைகள் சிலவற்றையும் குறுந் தொகைப் பாடல்கள் விளக்கிச் செல்கின்றன. எடுத்துக் காட்டாக, ஒன்று பார்ப்போம். எவ்வளவு உயர்ந்த பொருளாக இருந்தாலும் அதைத் தொடர்ந்து பயன் படுத்தினால் அதனிடம் நமக்கு ஒரு வகையான சலிப்புத் தோன்றிவிடும். பழக்கத்தின் காரணமாக நல்ல பொருள் களும் நமக்குக் கசப்பை உண்டாக்குகின்றன. இது, நாம் வாழ்க்கையில் பொதுவாகக் கண்டு வரும் உண்மை. உலகில் சுவைக்கும் பொருள்களாக இருப்பவையெல்லாம் எப்பொழுதும் தொடர்ந்து நமக்குச் சுவையளிப்பவை யல்ல. ஒருகால் கரும்பாக இனித்த பொருளே மற்றொரு

காலத்தில் வேம்பாகக் கசக்கும். மனிதரின் மனமாற்றத்தால் இவ்வாறு சுவைகள் மாறுகின்றன என்பது உண்மையாயினும், தொடர்ந்து பழகும் பழக்க மிகுதியும் இதற்குக் காரணமாகும். அறிவுச் சிறப்போ, உயர்ந்த பண்போ இல்லாத சாதாரண மனிதரிடம் பழகும் போதும் காலப் போக்கில் அவரிடம் நமக்குச் சலிப்பே தோன்றுகிறது. இச்சலிப்பு வெறுப்பாகி, வெறுப்பு பகையாய் முடிவதும் உண்டு. இதனுல்தான் திருவள்ளுவர் மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் நெருங்கிய தொடர்பாகிய 'நட்பைப்' பற்றிக் கூறும்போது, அதை உயர்ந்தவர் நட்பு என்றும், தாழ்ந்தவர் நட்பு என்றும் இரண்டாகப் பிரித்து. அறிவுடையவர்களோடு கொள்ளும் நட்பு வானத்து வளர்பிறையை ஒத்து நாள் தோறும் வளர்ந்து வரும் என்று கூறுகின்ருர். நூல்களைத் திரும்பத் திரும்பக் கற்ருல் அதில் உள்ள புதுப்புது நயங்கள் விளங்குவதுபோல் பண்புடையவர்களோடு கொள்ளும் நட்பு எவ்வளவு காலமாயினும் புதுமை குறையாததாய் நன்மை தருவதாய் நீடித்து நிற்கும் என்றும் அவர் கூறுகிருர்.

*" நிறை நீர நீரவர் கேண்மை "* (குறள் : 782)

*" நவில் தொறும் நூல் நயம் போலும்*
*[பயில் தொறும்*
*பண்புடையாளர் தொடர்பு "* (குறள் : 783)

அறிவுடையவரோடும் பண்பாளரோடும் நட்புக் கொண்டால், உலகில் சாதாரண மனிதரோடு பழகுங்கால் உண்டாகும் சலிப்பும் வெறுப்பும் பகையும் அந்நட்பில் தோன்ற இடமில்லை ; அது நாளும் நாளும் வளர்ந்து கொண்டே போகும் என்பதே திருவள்ளுவர் கருத்து. அறிவும் பண்பும் இல்லாதவரைப் போலவே, உலகத்துச்

சுவைப் பொருள்கள் எல்லாம் பழக்கத்தின் காரணமாக வெகு விரைவில் புளித்துப் போய்விடும். இவ்வுண்மையை மிக அழகாகக் கூறுகிறது கூறுந்தொகைப் பாடல் ஒன்று. வழக்கம் போல ஒரு பெண்ணின் வாழ்க்கை மேல் வைத்தே இதனைக் கூறுகிறது.

அந்தப் பெண்ணிடம் காதல் கொண்டு, பலநாள் அன்புடன் பழகித் திருமணம் செய்து கொண்டு அவளுடன் இன்பமாக இல்லறம் நடத்தினன் ஓர் இளைஞன். சில ஆண்டுகள் கழிந்தன. அச்சில ஆண்டு களில் அவள் மனம் போல நடந்தான் அவன். அவள் விரும்பிய தெல்லாம் தேடிக்கொடுத்தான். ஒருகணமும் பிரியாமல் உடனிருந்து மகிழ்வித்தான். சுருக்கமாகக் கூறினல், இருவரும் மதனனும் இரதியும் போல் எல்லா இன்பமும் அனுபவித்து இணைபிரியாது வாழ்ந்தார்கள். நாள் ஆக ஆக, அவளிடத்தில் அவனுக்குச் சலிப்பு உண்டாயிற்றுப் போலும்! ஒரு பொதுமகளோடு தொடர்பு கொள்ளத் தொடங்கினன். அவளுடைய அழகில், கலையில் மயங்கினன். தொடர்பு பிறகு நெருங்கிய உறவாக மாறியது. மனைவியை மறந்து சிலநாள் பொதுமகளின் இல்லத்திலேயே தூங்கவும் தொடங்கினன். இதைக் கண்டு, அவன் மனைவி உள்ளம் விம்மினள்; பொருமினள்; புலம்பினள். தன்னிடம் கணவன் காட்டி வந்த அன்பெல்லாம் இப்போது எங்கே போய் மறைந்ததோ என்று எண்ணி ஏங்கினள். திருமணத் திற்குமுன் காதல் புரிந்த நாட்களிலும் குடும்பம் நடத்திய சில ஆண்டுகளிலும் அவனுக்குக் கரும்பாக இனித்த மனைவி, இப்போது வேம்பாகிவிட்டது ஏன் என நினைத்து மாழ்கினள். அவள் துயரத்தைக் கண்ட தோழி ஆறுதல் கூற வகையறியாமல் திகைத்தாள். இவ்வாறு சென்றன சில நாட்கள். ஒருநாள், தலைவன் தன் மனைவியை

நினைத்துக்கொண்டு, அவளைப் பார்க்க வந்தான். வீட்டு முகப்பில் தோழி நின்ருள். அவளை நலம் விசாரித்தான். அவள் அவனிடம் கூறுகிருள் :

" தண்ணீர் மிகவும் இனியது ; குளிர்ச்சியானது; உடலுக்கு நன்மை செய்வது. ஆனால் தண்ணீர் நிறைந்த குளத்தில் அதிகநேரம்விளையாடினால் நம் கண்கள் சிவந்துவிடும். தேன் மிக்க இனிப்பானது. அதுவும் பலமுறை பருகியவருக்குப் புளிப்புச் சுவையைத்தான் தரும். முன்பு, தலைவி உனக்கு மிக் இனியவளாக இருந்தாள். உன்னை ஒருநாள் காணுமலிருந்தாலும் அவள் துன்புறுவாள் என்று எண்ணி நாள் தவருமல் வந்து துன்பம் நீக்கி இன்பம் நல்கினுய். அவளுக்குச் சிறு துன்பம் வந்தாலும் நீ பொறுக்க மாட்டாய். ஒருமுறை அவளை நடுத்தெருவில் பாம்பு தீண்டவந்தபோது காப்பாற்றினுய். அது ஒருகாலம். இப்போது அவளைப் பிரிந்து இருப்பதே உனக்கு இன்பமாகப் படுகிறது போலும்! அப்படியானல் அவளை அவள் பெற்றேரிடம் கொண்டு விட்டு விடு :

*" நீர் நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்*
*ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்*
*தணந்தனை ஆயின்எம் இல் உய்த்துக் கொடுமோ,*
*அம் தண் பொய்கை எம் மூர்க்*
*கரும் பாம்பு வழங்கும் தெருவில்*
*நடுங்கு அஞர் எவ்வம் களைந்த எம்மே.* (குறும் : **354**)

[தணந்தனையாயின் - பிரிவாயானல் ; இல் உய்த்துக் கொடுமோ - வீட்டில் கொண்டு போய் விடுவாயாக ; அஞர் எவ்வம் - மிக்க துன்பம் - பாம்பு வந்ததால் உண்டான துன்பம்.]

தோழியின் பேச்சில் மேலே விளக்கிய உலகியல் உண்மை எவ்வளவு நன்ருக விளக்கப்படுகிறது ! இக்

கவிதையைத் தோழியின் பேச்சாகப் பாடுகின்றவர் 'கயத்தூர் கிழான்' என்னும் புலவர்.

ஆடவரும் பெண்டிரும் காதல் இன்பம் அல்லது காதல் காரணமாக விளைந்த துன்பம் ஆகியவற்றின் வயப் பட்டுத் தம் உள்ளத்தில் மட்டும் உணர்ந்து வெளியில் யாருக்கும் உரைக்க முடியாதபடி, பெற்ற உணர்ச்சிகளை மிக நாகரிகமாகத் தெரிவிக்கும் குறுந்தொகைக் கவிதைச் செல்வங்களில் உள்ளங் கவர்ந்து உவகை ஊட்டும் உவமைகளும், வாழ்க்கையோடு தொடர்புடைய எழில் மிகும் இயற்கைக் காட்சிகளும் வாழ்க்கைக்கு உதவும் பொன்போன்ற கருத்துக்களும், உலகியலில் காணும் சில அரிய உண்மைகளும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன என்பதை அறிகின்றபோது நம் அருமைத் தமிழ் மொழிக் குக் கிடைத்துள்ள இதுபோன்ற இலக்கியங்களை நினைத்து இறுமாப்பும் பெருமையும் கொள்ளுகின்றோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வரும் பெரும் இலக்கியங் களைத் தமிழகம் உருவாக்கியது என்னும் உண்மையை உலகின் முன் தமிழன் தலை நிமிர்ந்து சொல்லலாமன்றோ? கருத்துக்கு விருந்தாய், களைத்துச் சோர்ந்த மனத்திற்குக் களிப்பூட்டும் கள்ளாய், வாழ்க்கையில் அடிபட்டுப் புண்பட்டு வருந்தும் உள்ளத்திற்கு மருந்தாய் விளங்கும் குறுந்தொகையைத் தமிழர் பெற்ற அமுது என்று கூறுவதில் தவறில்லை. இந்த அமுதை நாம் அனைவரும் பருகிச் சுவைத்து இன்பம் பெறுவோமாக.

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழ்ப் பல் துறை

# அருணோதயம் தொகைநூல் வரிசை

இந்த நூல்வரிசை தமிழகத்திற்கு புதியது மட்டுமல்ல, சிறப்புடையது என்று நல்லறிஞர் பலரும் போற்றுகின்றனர்.

**உங்கள் ஆதரவும், வரவேற்பும்தான் இதன் வளர்ச்சிக்கு அடிகோலும்.**

ஒவ்வொரு மாணவரிடமும் இருக்கவேண்டிய **இலக்கியச் செல்வம்.**

ஒவ்வொரு இலக்கிய ரசிகரும் படிக்கவேண்டிய **அறிவுக் கருவூலம்.**

ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இருக்கவேண்டிய **கலைப் பெட்டகம்.**

●

**இன்றே எழுதுங்கள்**

**அருணோதயம் : : சென்னை-14.**

WRAPPER PRINTED AT THE ASIAN PRINTERS, MADRAS-5.